குமரகுருபரன்



மலர் 13] 1962-ஆ குருபூசை மலர் . [இதழ் 5

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்,
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலே, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L.
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம்-ஹைரோடு. சென்னை - 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

5|-

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
274-ம் ஆண்டு மகேசுவர பூசைத் திருநாள்

சுபகிருது ௵ வைகாசி ௴ 9 உ செவ்வாய்க்கிழமை



22—5—1962

ஸ்ரீ காசி மடம் : : திருப்பனந்தாள்

சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூசைத் திருநாளன்று

வடக்கே இமயமலையில் 12,000 அடி உயரத்திலுள்ள திருக்கேதாரம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலுள்ள தலங்களில் நடைபெறும்

அந்தணர், அருந்தவர், ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பு

தருமங்களின் விபரம்

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றவை

	தொடர் எண்	தரும எண்	மூலதனம் ரூபாய்	அன்னம்பாலிப்பு நடைபெறும் தலங்கள்	அன்னம் பாலிப்பு செலவுத் தொகை	கண்காணிப்பவர்கள் விலாசம்
சிவ	1	224	7,000	திருக்கேதாரம்	272	ஸ்ரீ கணேஷ் சங்கர், கேதாரநாத் பண்டா, கேதாரநாத், இமயமலை.
சிவ	2	215	7,000	ரிஷிகேசம்	204	ஸ்ரீ சுவாமி சிவாநந்தஜி மகராஜ், சிவானந்த ஆச்ரமம், ரிஷிகேசம்.
சிவ	3	200	8,000	ஹரத்துவார்	272	போலாநாத் ஆச்ரமம், ஹரத்துவார்.
சிவ	4	263	5,600	பிரயாகை	208	ஜோஷி மடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகள் மடம்.
சி.	5	11	10,000	ஸ்ரீ காசி	330	ஸ்ரீ குமாரசாமி மடம், கேதாரக் கட்டம், வாரணசி.
சிவ	6	277	7,000	திருக்காளத்தி	204	திரு. க. சுப்பிரமணிய அய்யர் B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
சிவ	7	270	7,000	திருத்தணிகை	204	ஷை ஷை
சிவ	8	297	5,000	வடதிருவாலங்காடு	145	திரு. மு. சபாபதி தேசிகர், வடதிருவாலங்காடு.
சிவ	9	220	7,000	காஞ்சிபுரம்	204	திரு. க. சுப்பிரமணிய அய்யர் B. A., தியாகராஜ விலாசம், சென்னை.
சிவ	10	284	7,000	திருக்கழுக்குன்றம்	204	ஷை ஷை
சிவ	11	93	5,000	சென்னை	150	சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை.
சிவ	12	252	7,000	திருவண்ணாமலை	272	திரு தி. சண்முகசுந்தர ஓதுவார், திருவண்ணாமலை.
சிவ சிவ	13	207	20,000	சிதம்பரம்	150	ஸ்ரீ காசிமடம், சிதம்பரம்.
சிவ	14	265	5,000	ஆச்சாள்புரம்	200	திரு. S. நாகலிங்கம்செட்டியார், ஆச்சாள்புரம்.

சிவ	15	302	5,000	காவிரிபூம்பட்டினம்	145	ந. S. சம்பந்தம் பிள்ளை, கீழப்பெரும்பள்ளம்.
சிவ	16	262	5,000	சீர்காழி	145	திரு. வி. சுவேதாரணியம் அய்யர், அட்வகேட், சீர்காழி.
சிவ	17	250	7,000	வைத்தீசுவரன்கோயில்	204	திரு. R. S. ராமையா பிள்ளை, பூங்குடி முதலியார் சத்திரம், வைத்தீசுவரன்கோயில்.
சிவ	18	301	5,000	ஆக்கூர்	145	திரு. T. R. அகோரமய்யர், ஆக்கூர்.
சிவ	19	287	10,000	மாயூரம்	290	திரு. G. S. பிள்ளை (கேதாரம்பிள்ளை), பல்லவராயன்பேட்டை.
சிவ சிவ	20	139	1,00,000	திருப்பனந்தாள்	4,000	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
சிவ	21	253	7,000	சுவாமிமலை	204	திரு. N. R. இராமானுஜம் B. A., கும்பகோணம்.
சிவ	22	268	6,000	திருவையாறு	194	திரு. அண்ணாசாமி பாகவதர், திருவையாறு.
சிவ	23	264	5,000	திருப்புகலூர்	200	திரு. N. M. சோமசுந்தரம் பிள்ளை, திருப்புகலூர்.
சிவ	24	238	7,000	திருவாரூர்	204	திரு. டி. சோமாஸ்கந்த தேசிகர், திருவாரூர்.
சிவ	25	305	5,000	வேதாரண்யம்	145	திரு. S. P. வெங்கட்ராமய்யர், பெரி. அழ. மு. அன்னசத்திரம், வேதாரண்யம்.
சிவ	26	261	7,000	திருவானைக்கா	204	திரு. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருச்சிராப்பள்ளி.
சிவ	27	318	5,000	விராலிமலை	145	ஷை ஷை
சிவ	28	271	10,000	பழநி	290	ஸ்ரீ சாதுசுவாமிகள் மடம் (ஸ்ரீசிவகுமார சுவாமிகள்), பழநி.
சிவ சிவ	29	239	2,50,000	மதுரை	500	திரு. சிவதர்மபாஸ்கர ம. க. சுந்தரேச பட்டர், மதுரை.
				கன்னியாகுமரி ஆச்சிரமம் வகைவகு தருமங்கள்		
சிவ	30	258	5,000	திருக்குற்றாலம்	194	திரு. A. C. சண்முகநயினார் பிள்ளை, B. A., B. L., திருக்குற்றாலம்.
சிவ	31	247	5,000	பழையபாபநாசம்	145	திரு. D. மரகதசுப்பிரமணிய பிள்ளை, அம்பாசமுத்திரம்.
சிவ	32	297	5,000	திருநெல்வேலி	145	திரு. சி. ச. அருணாசலம்பிள்ளை, உரிமையாளர், கணபதிமில்ஸ், தாழையூத்து.
சிவ	33	21	9,000	ஸ்ரீவைகுண்டம்	270	திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L., ஸ்ரீவைகுண்டம்.
சிவ	34	95	5,000	திருச்செந்தூர்	145	ஷை ஷை
சி.	35	12	10,000	இராமேசுவரம்	330	ஸ்ரீ காசிமடம், சன்னிதித்தெரு, இராமேசுவரம்.
சிவ	36	201	7,000	கன்னியாகுமரி	204	ஸ்ரீ காசி மடம், ஆச்சிராமம்.
			5,87,600		11467	

சிவ சிவ

Endowments created by His Holiness

Silasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal

Head of Sri Kasi Mutt, Tirupanandal

for feeding of Brahmins, Ascetics & the poor etc.,
on Sri Kumaragurupara Swamigal Maheswarapuja (Memorial) Day
from Tirukkedar situated at a height of 12,000 feet on the Himalayas in the north
to Kanyakumari in the south of India

Serial number		Endowment Number	Capital Rupees	Places where feeding is conducted	Amount Spent Rs.	Names of persons who supervise the feeding
Siva	1	224	7,000	Tirukedaram	272	Shri Ganesh Shankar, Kedarnath Panda, Kedarnath, Himalayas.
Siva	2	215	7,000	Rishikesh	204	Shri Swami Sivanandji Maharaj, Sivanantha Ashram. [Rishikesh.
Siva	3	200	8,000	Haradwar	272	Bolanath Ashram, Haradwar.
Siva	4	263	5,600	Prayag	208	Sankaracharya Swamigal Mutt of Joshi Mutt.
Si	5	11	10,000	Varanasi	330	Sri Kumaraswami Mutt, Kedar Ghat. Varanasi.
Siva	6	277	7,000	Kalahasti	204	Sri K. Subramanya Aiyer, B.A., Thyagarajavilasam [Madras-5.
Siva	7	270	7,000	Tiruthanigai	204	-do- -do-
Siva	8	297	5,000	Vada Tiruvalangadu	145	Sri M. Sabhapathi Desigar, Vada Tiruvalangadu.
Siva	9	220	7,000	Kanchipuram	204	Sri K. Subramanya Aiyer, B.A., Thyagaraja vilasam [Madras 5.
Siva	10	284	7,000	Tirukalukunram	204	-do- -do-
Siva	11	93	5,000	Madras	150	Chennapuri Annathana Samajam, Madras.
Siva	12	252	7,000	Tiruvannamalai	272	Sri T. Shanmugasundara Oduvar, Tiruvannamalai.

Siva Siva	13	207	20,000	Chidambaram	150	Sri Kasi Mutt, Chidambaram.
Siva	14	265	5,000	Achalpuram	200	Sri S. Nagalingam Chettiar, Achalpuram.
Siva	15	302	5,000	Kaviripoompattinam	145	Sri S. Sambandam Pillai, Kilaperumpallam.
Siva	16	262	5,000	Sirkali	145	Sri V. Swetharanyam Iyer. Advocate, Sirkali.
Siva	17	250	7,000	Vaitheeswarankoil	204	Sri R. S. Ramayya Pillai, Poongudi Madaliar Choultry, [Vaitheeswarankoil.
Siva	18	301	5,000	Akkur	145	Sri T. R. Aghoram Iyer, Akkur.
Siva	19	287	10,000	Mayuram	290	Sri G. S Pillai (Kedaram Pillai), Pallavarayanpettai.
Siva Siva	20	139	1,00,00	Tirupanandal	4,000	Sri Kasi Mutt. Tirupanandal.
Siva	21	253	7,000	Swamimalai	204	Sri N. R. Ramanujam, B.A., Kumbakonam.
Siva	22	268	6,000	Tiruvaiyaru	194	Sri Annasami Bhagavathar, Tiruvaiyaru.
Siva	23	264	5,000	Tirupugalur	200	Sri N. M. Somasundaram Pillai, Tirupugalur
Siva	24	238	7,000	Tiruvarur	204	Sri D. Somaskanda Desigar, Tiruvarur.
Siva	25	305	5,000	Vedaranyam	145	Sri S. P. Venkatarama Iyer, Peri. Azha. Mu. Annasathiram, Vedaranyam.
Siva	26	261	7.000	Tiruvanaikka	204	Sri T. Pattuswami Oduvar, Tiruchirapalli.
Siva	27	318	5,000	Viralimalai	145	-do- -do-
Siva	28	271	10,000	Palani	290	Sri Sadhu Swamigal Mutt, (Sri Sivakumara Swamigal) Palani.
Siva Siva	29	239	2,50,000	Madurai (Kanyakumari Achiramam etc., Charities)	500	Sri Sivadharmabhaskara M. K. Sundaresa Bhattar, Madurai.
Siva	30	258	5,000	Tirukutralam	194	Sri A. C. Shanmuga Nainar Pillai, B.A., B.L., Courtallam.
Siva	31	247	5,000	Old Papanasam	145	Sri D. Maragathasubramanya Pillai, Ambasamudram.
Siva	32	297	5,000	Tirunelveli	145	Sri C. S. Arunachalam Pillai, Ganapathi Mills, Thazhaiuthu.
Siva	33	21	9,000	Srivaikuntam	270	Sri T. M. Kumaraguruparan Pillai, B. A., B. L., [Srivaikuntam.
Siva	34	95	5,000	Tiruchendore	145	-do- -do-
Si	35	12	10,000	Rameswaram	330	Sri Kasi Mutt, Sannithi St. Rameswaram.
Siva	36	201	7,000	Kanyakumari	204	Sri Kasi Mutt, Achiramam.
			5,87.600		11467	

உ
சிவ சிவ

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப்பெருமான் அருளால் ஐந்தாவது ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி அருள்பெற்றார்; மதுரை மீனாட்சியம்மை மீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றார்; திருமலைநாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை அருளினார்; தருமை ஸ்ரீ மாசிலா மணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக்கோவை' பகர்ந்தார்; ஆரூர், வேளூர், தில்லை தரிசித்து, மாலை, கோவை முதலியன பாடினார்; காசி சென்று, 'சகலகலாவல்லிமாலை,' 'காசிக்கலம்பகம்' முதலியன அருளினார்; சிங்கத்தின் மீதேறிச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத்துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பலவாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்யா குருவாகத் திகழ்ந்தார்.

செயற்கரிய செயல்கள் பல புரிந்த குமரகுருபர முனிவர் பெருமானின் நினைவு உலகுக்குச் சிவநெறி காட்டி இன்பம் பயக்கும்.

வேத புருடனும் விராட் புருடனுமே
இனையறின் தன்மைமற் றெம்ம னோரும்
நினையவும் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழிய பெருமநின் தகவே
வாழியெம் மனனும் மணிநா வும்மே. — மதுரைக்கலம்பகம்

ஸ்ரீ காசி மடம் : : திருப்பனந்தாள்

குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 4'62.

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 13 ‖ சுபகிருது-ஸு வைகாசித் திங்கள் 1-ம்உ [14-5-62] ‖ இதழ் 5

சிதம்பரச் செய்யுட் கோவை

மாணிக்கவாசக அடிகள்

[கட்டுரை 57]

திருமால், அயன்முதலியோர் நடராசப்பிரான் திருவடி மலர்களை (வணங்கும் பொருட்டு வளைத்த) தலையின் வணக்க மெல்லாம் அம்முழுமுதல்வனது திருப்பாதத்தின் கீழ்க்குடி கொண்டன. அக்குடி கொண்டவை எண்ணில்லாதன. அதனால், அத்திருப்பாதம் அவை எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்துக் காத்தருளற் பொருட்டு வளைந்து விளங்கிற்று, அதனால் அத் திருவடியை அக்காலம் முதலாகக் குஞ்சிதபாதம் எனப் போற் றினர். அத்திருமால் முதலிய அமரர் எல்லாரும், குஞ்சிதம், வணக்கம், வளைவு முதலியன ஒருபொருளனவாய (பரியாயச்) சொற்கள். தூக்கிய திருவடியைக் 'குஞ்சிதபாதம்' என்பது சைவ

மரபு. ஊன்றிய திருவடியை வணங்கின் மலம் அகலும். எடுத்த திருவடியை வணங்கினால், பேரின்ப வாழ்வு எய்தும். முன்னது பாசவீடு (துக்கநிவர்த்தி), பின்னது சிவப்பேறு (சுகப்ராப்தி), இரண்டும் பெற்ற திருமால் முதலோர்க்கு என்றும் நிலைத்த இன்ப வாழ்வு அக்குஞ்சிதபாத நிழலை அன்றி வேறு இல்லை. அவர் அனைவரும் வணங்கும் வணக்கமெல்லாம் அத் திருவடியிற் குடிகொண்டிருத்தலை அறிந்தோர், அத்திருவடி வளைவுடையது அன்று. அனைவர் தலைவணக்க மெல்லாம் ஒருங்கு குடிகொண்டிருக்கும் காட்சியே திருவடி வளைவுடையது போலத் தோன்றுகின்றது. உண்மையில் திருவடிக்குவளைவே யில்லை. தலைவணக்கங்களின் குனிப்பையே நடராசப்பிரான் திருவடியின் குனிப்பாக மயங்கிக்கொண்டு கூறிவருகின்றனர் போலும். இது கவியின் சாதுரியப் பேச்சு. உண்மையில், ஆட எடுத்திட்ட திருப்பாதம் வளைவுறும், ஊன்றிய திருப்பாதம்போல் செவ்விதாயிராது. வளைவிற்குக் காரணம் கற்பித்தவாறு இது. இதனைச் சிதம்பரச் செய்யுட் கோவையில் விளக்கிய அழகு இது:—

'அடிகொண்ட குனிப்பன்றே அரிபிரமர் முதலானோர்
முடிகொண்ட தலைவணக்கின் குனிப்பெல்லாம் முறைமுறைபோய்க்
கடிகொண்ட பொழிற்றில்லை நடராசன் கழற்காலிற்
குடிகொண்ட படிபோலும் இடத்தாளிற் குஞ்சிதமே'

குறிப்பு: அடி - திருவடி. கொண்ட - அடைந்த. குனிப்பு-வளைவு, குஞ்சிதம். அரிபிரமர் - நூறுகோடி பிரமர்கள்......... ஒருவனே! தலைவணக்கு - தலையால் வணங்கும் வணக்கம். வணக்கின் குனிப்பு - வணக்கத்தால் எய்தும் தலையின் வளைவு. முறைமுறை - ஒன்றன்பின் ஒன்றாய்ச் செல்லும் முறைமை. கடி - மணம். பொழில் - சோலை. கழல் - வீரக்கழல். ஈண்டு இடத்தாளிற் கட்டும் கழலைக் குறித்தது. குடி - வாசம். குஞ்சிதம் - வளைவு. இடத் தாளிற் குஞ்சிதம் - குஞ்சிதபாதம்.

(தொடரும்)

பாலித்தீவில்

திரு. ஸி. டி. நாச்சியப்பன் அவர்கள்

இந்தோநேஷியத் தீவுக் கூட்டத்தில், ஜாவாவிற்குக் கிழக்கே உள்ளது 'பாலி' என்ற ஒரு சிறிய தீவு. அதன் பரப்பு சுமார் 2200 சதுர மைல்களே. இந்தோநேஷியாவின் தலைநகரான ஜகார்தாவிலிருந்து வானவழியில் $3\frac{1}{2}$ மணி நேரப் பிரயாணத்தில் அத்தீவை அடையலாம். அதன் அதிகப்படி நீளம் 80 மைல்கள். அத்தீவில் ஒரு பாதி நிலத்திலேயே மக்கள் வசிக்கின்றனர். மற்றப் பாதி மிக நெருக்கமான காடுகளும், மலைகளும் நிறைந்துள்ளது.

இத்தீவில் ஏறக்குறைய 10 லக்ஷம் மக்கள் குடியிருக்கின்றனர். நாட்டின் குறுக்கே கிழக்கு மேற்காக ஒரு மலைத் தொடர் செல்லுகிறது. அம் மலைகள் பெரும்பாலும் முன்பு எரிமலைகளாய் இருந்தவை: அவற்றுள் பாட்டுர் என்னும் மலையிலிருந்து இக்காலத்திலும் நெருப்பு வெளிப்படுகிறது. அதைச் சூழ்ந்து ஒரு அழகான ஏரியும் உண்டு. பாலித்தீவின் மிக உயரமான மலைக்கு "குனுங்அகுங்" என்று பெயர். இது 10,000 அடி உயரமுள்ள மிக அழகான மலை. இதனால் பாலித்தீவே பார்ப்பதற்கு மிக ரமணியமாக அமைந்துள்ளது.

இந்தத்தீவின் பழம் சரித்திரத்தைப்பற்றி நாம் ஒன்றும் அறிய இயலவில்லை. இந்தோநேஷியாவில் பொதுவாகவும், ஜாவாவில் சிறப்பாகவும், பழங்காலந்தொட்டே ஹிந்து மதமும், பௌத்த மதமும், பரவியிருந்தன. ஜாவாவிலிருந்த ஹிந்துக்கள்

சென்னை அகில இந்தியா ரேடியோ வானொலிப் பதிப்பாசிரியர் அவர்கள் அன்பனுமதி பெற்று இவ்விதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பாலியிலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவ, அந்நாட்டில் ஹிந்து மதத்திற்கு ஒரு மேன்மை உண்டாயிற்று. வடமொழியையும், ஹிந்துமதக் கொள்கைகளையும் கற்றுக் கொள்ளுவதற்காக, ஜாவாவிலிருந்தும், பாலியிலிருந்தும் அடிக்கடி மாணவர்கள் இந்தியாவிற்கு வந்து தங்கி, திரும்புவது வழக்கமாக இருக்கிறது. அக்காலத்தில் பாலித்தீவை ஆண்ட மன்னர்கள், ஹிந்து மதத்தின் பெருமையை உணர்ந்து, இந்தியாவிலிருந்து பல புரோகிதக் குடும்பங்களை அங்கு குடியேறச் செய்தனர் என்றும், அவர்களே ஹிந்துமதத்தை அங்கு வேரூன்றச் செய்தார்களென்றும் கூறப்படுகிறது.

பிறகு ஜாவாவில் இஸ்லாமிய மதம் புகுந்தபின் அங்கிருந்த ஹிந்துக்களும், தங்களுக்குப் பாதுகாவலான இடம் பாலித்தீவே என்று உணர்ந்து அங்குபோய்க் குடியேறினுர்கள். அன்றுமுதல் இன்றுவரையில் ஹிந்து மதம் பாலித்தீவில் மக்களால் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது.

இதனுல் ஹிந்து மதம் உலகத்தில் இந்தியாவில் மட்டும் இருக்கிறது என்பது அல்லாமல், இந்தோனேஷியாவின் பாலித்தீவிலும் இன்று வாழ்கிறது என்பதை நாம் அறிகிறோம்.

இவற்றோடு, பாலிநாட்டு மக்கள் மலை, சூரியன், ஏரி, மரம், பாம்பு முதலிய இயற்கைப் பொருள்களையும் நம்மைவிட அதிகம் பூசிக்கிறுர்கள். இதற்குக் காரணம் தெய்வங்களோடு கூடிய ஹிந்து மதம் அங்கே பரவுவதற்கு முன்னே அந்நாட்டின் மக்கள் இயற்கைப் பொருள்களை மட்டிலும் வணங்கினுர்கள் என்பதும் ஆகலாம்—பௌத்த மதமும் அந்நாட்டில் பரவியிருந்தாலும், அது ஹிந்து மதத்தோடு பிணைந்திருந்ததேயன்றி, அதற்கு எதிராகவோ, அல்லது தனித்தோ அந்த நாட்டில் எக்காலத்தும் வழங்கவில்லை. இப்பிணைப்பை இங்கு சிவ பௌத்தம் என்று சொல்கிறுர்கள்.

பாலித்தீவில் இன்னும் பல பழமையான, கலப்பற்ற புராதன ஹிந்து பழக்க வழக்கங்களையும், கொள்கைகளையும் நாம் காணலாம். இங்கு நம் நாட்டைப் போலக் கிராமங்களே மிக அதிகம். கிராமங்களைச் சுற்றி வயல்களும் தோப்புகளும் நிரம்பஉள்ளன

மக்களின் முக்கிய தொழில் விவசாயமே. "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று நம் நாட்டில் சொல்லும் பழமொழிக்கு இணங்க, பாலியில் கோயில் இல்லாமல் ஒரு கிராமத்தைக் கூட காணமுடியாது. பல கிராமங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்களும் உண்டு. கோயில்கள் கிராமங்களின் நடுவிலேயே உள்ளன. கிராமத்தின் பொதுவாழ்க்கை நடக்குமிடம் கோயிலிலேதான். நாடகம் நடித்தல், நீதி வழங்குதல், பஞ்சாயத்துப்பேசுதல் முதலிய பல பொதுஜன நடவடிக்கைகள் கோயில்களிலேயே நடைபெறுகின்றன.

கோயிலுக்குள் நாம் செல்ல வேண்டுமானுல் முதலில் குறைந்தது இருபது, முப்பது படிகள் ஏறவேண்டும். அவற்றின் முடிவில் ஒரு கோபுரமும் அதன் இரண்டு புரங்களிலும் இரண்டு துவாரபாலர்களும் உண்டு. கோபுரவாயிலைக் கடந்த உடன் நீண்ட சதுரமான ஒரு முற்றம் இருக்கிறது. அதற்கு அப்பால் ஒன்றன்பின் ஒன்ருகச் சிறியதான இரண்டுமுற்றங்கள் இருக்கும். இரண்டாவது முற்றம் மக்கள் கூடி நின்று வழிபாடு செய்யும் இடம். பெரும்பாலும் அங்கு சிவன், பிரம்மா, விஷ்ணு, சூரியன் முதலிய தெய்வங்களையே பூசிக்கிருர்கள். பாலித்தீவில் சைவமே முக்கியமான மதம். சிவனுக்கே கோயிலில் நடு இடம் கொடுக்கப்பட்டு உள்ளது.

கோயில்களில் தெய்வங்கள் இருக்குமிடங்களுக்கு மேலே பல தட்டுகளில் வரவரக் குறுகிச் செல்லும் விமானங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு 'மேரு' என்று பெயர். இவை மூங்கில்களாலும், பனைநார்களாலும் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றை 30 ஆண்டுகளுக்கு ஒரு தரம் பழுது பார்க்கிருர்கள்.

பூசை முறை பெரும்பாலும் நமது கோயில்களில் நடைபெறுவது போலவே அங்கும் நடைபெறுகிறது. தீபம், தூபம், மணியடித்தல், சோற்று நைவேத்தியம், அரிசி, தேங்காய், பழம், சந்தனம், புட்பம் முதலியன படைத்தல், தீர்த்தப் பிரசாதம் வழங்குதல் முதலியன யாவும் நம் நாட்டில் நடப்பன போலவே நடைபெறுகின்றன. தீபம், தூபம், பூஜை என்ற வடமொழிப்பெயர்கள் அப்படியே அங்கும் சொல்லப்படுகின்றன.

பூஜை செய்பவருக்கு 'பெடாண்டா' என்றும், பண்டிதர் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. அவர்கள் வேதம் ஓதும் பிராமணர்களே. தீர்த்தத்திற்கு தீர்த்த கங்கை என்ற ஒரு புனித இடமும் பாலியில் காணலாம். நம் நாட்டில் உள்ளதைப்போல அங்கும் பிராம்மணர், க்ஷத்ரியர் முதலிய நான்கு ஜாதிகளும் இருக்கின்றன. ஆனால் ஜாதிக் கட்டுப்பாடு, பிணக்கு, ஏற்றத்தாழ்வு இதெல்லாம் அங்கு காணப்படவில்லை. பிராம்மணர்கள் பேசும் பாஷையில் வடமொழிச் சொற்கள் அதிகம் கலந்துள்ளன. நாலு வேதங்களும் அங்கு நடைமுறையில் வழங்குகின்றன. குழந்தைகளுக்கு மத அறிவு கற்பிப்பதை ஆகமம் கற்பித்தல் என்கிறார்கள். அதை ஆரம்பிக்கும்போது, 'ஓம் நமச் சிவாய' என்று தொடங்குகிறார்கள்.

பாலித்தீவில் உத்ஸவங்களும், பண்டிகைகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. 'நெப்பி' என்று சொல்லப்படும், புது வருஷப் பிறப்பையும், 'காலுங்கன்' என்று சொல்லப்படும் பண்டிகையையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். நெப்பி' என்ற புது வருஷப்பிறப்பு நம் தென்னாட்டிற்கே உரித்தான சக வருஷக் கணக்கைக் குறிக்கிறது. 'காலுங்கன்' என்ற பண்டிகை நம் நாட்டில் கொண்டாடப்படும் தீபாவளிப் பண்டிகையை யொத்தது. இந்தப் புனித தினங்களில், புது ஆடைகளை யணிந்தும் பூசைகள் செய்தும், ஹிந்து புராணக் கதைகளை நாடகமாக ஆடியும் மகிழ்கிறார்கள்.

'நெப்பி' என்று சொல்லப்படும் புது வருடப் பிறப்பிற்கு இரண்டு தினங்கள் முன் 'மேலிஸ்' என்ற ஒரு உத்ஸவத்தையும் விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இத் தினத்தில் தெய்வத்திற்குப் புட்பம் முதலியவற்றால் அலங்காரம் செய்து அதனை ஒரு பீடத்தில் வைத்துக் கட்டி பெண்கள் தங்கள் தலைகளின் மேல் வைத்துக் கடற் கரைக்கோ ஆற்றங் கரைக்கோ தூக்கிச் செல்லுவார்கள். ஊரார் இரண்டு பக்கங்களிலும் வரிசையாக முன்னே செல்லுவார்கள். அலங்காரமான குடைகளையும் கத்திகளையும் தெய்வத்திற்கு முன்னே தூக்கிப் பிடித்துத் தாள வாத்திய முழக்கத்துடன் ஊர்வலம் சென்று தெய்வத்தை இறக்கிவைத்துப் பூஜை செய்கிறார்கள்,

இனி மொழியைப் பற்றிப் பார்ப்போம்.

ஹிந்து மதத்தின் காரணமாக பாலி மக்களின் மொழியில் வடமொழிச் சொற்கள் மிக அதிகமாகக் கலந்திருக்கின்றன. தேவா, தேவி, ஈசுவரா, கமண்டலு, புஸ்தகு, மேரு, கிரி, கிரகம், கும்பம், துக்கம், சுகம், கோபம், முதலிய வார்த்தைகள் குறிப்பிடத்தக்கன. தங்கள் மதத்தை இங்கு ஆகமம் என்று சொல்லுகிறார்கள் என்று முன்பே கூறினோம். மாங்காய், குளம் என்ற சில தமிழ்ச் சொற்கள்கூட இங்கு கலந்திருப்பது வியப்பைத் தருகிறது.

இராமாயணம், பாரதம் ஆகிய இரண்டு இதிகாசங்களே அங்கு பெரு வழக்கிலுள்ள புனித நூல்கள்—இந்நூல்களையும் பிற சாஸ்திர நூல்களையும் பாலி மக்கள் வெகு காலமாக வட மொழியிலேயே பனை ஓலைகளில் எழுத்தாணிகளால் எழுதி, கோயில்களிலும், வீடுகளிலும் இவற்றை வைத்துப் பூசிக்கிறார்கள். இச்சுவடிகளை 'லான்டார்' என்று சொல்லுகிறார்கள். இவ்வோலைகள் 3 அங்குல அகலமும் 24 அங்குல நீளமும் உள்ளன. இவற்றில் பலவற்றை நாம் இன்றும் பாலிக் கோயில்களில் காணலாம்—இச் சுவடிகளுக்கு வருஷத்திற்கு ஒரு நாள் பூசை செய்யப்படுகிறது. இதற்குப் பாலியிலும் சரஸ்வதி பூசை என்றே பெயர்.

பாலித்தீவில் பல பழக்க வழக்கங்களும், சடங்குகளும், பெரும்பாலும் நம் நாட்டு முறைகளையே ஒத்திருக்கின்றன.

பிறந்ததினம், கல்யாணம் முதலிய சடங்குகளில் பாது காப்பிற்காக, கையால் தயாரிக்கப்பட்ட திருநூல் கங்கணத்தைக் கையில் கட்டிக் கொள்ளுகிறார்கள்.

கல்யாணங்கள் மணமக்களின் பெற்றோர்களின் சம்மதத்துடன் பிராமண பண்டிதர்களால் நடத்தி வைக்கப்படுகின்றன.

முதற்குழந்தை ஆண் குழந்தையானால் அவர்களுக்கு மகிழ்ச்சி அதிகம். குழந்தை பிறந்தவுடன் தோட்டத்தில் தென்னம்பிள்ளையை நடுகிறார்கள். அக் குழந்தையும் தென்னம் பிள்ளையும் ஒருமிக்க வளர்கின்றன என்பது ஐதீகம். மூன்றாவது

மாதத்தில் ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் காது குத்தும் சடங்கு விமரிசையாக இங்கு நடக்கிறது.

குழந்தைகளுக்கு அடிக்கடி, பல விழாக்களும் சடங்குகளும் நடத்தப்படுகின்றன. குழந்தைகளைப் பாதுகாப்பதிலும், அவர்களுக்கு மதக் கொள்கைகளைச் சொல்லிக் கொடுப்பதிலும் அக்கறை காட்டுகிறார்கள்.

பல விடுகளில் சொந்த பூசைக்காக விக்கிரகங்களும், இடங்களும் உண்டு. விசேஷ தினங்களில் குருத்து ஓலைகளால் வீட்டையும் முன்புறத்தையும் அலங்காரம் செய்கிறார்கள்.

ஆண்களும், பெண்களும் இடுப்பில் ஒருவிதமான முண்டுகளைக் கட்டுகிறார்கள். பல பெண்கள் தலையைக் கொண்டையாக முடிந்து அதன்மீது சிறிய துணியைச் சுற்றிக் கொள்ளுகிறார்கள்—பெண்கள் தங்கள் தலைகளில் புஷ்பங்களை வைத்து அலங்கரித்துக் கொள்ளுவதையும் இங்கு காண்கிறோம்.

தென்னிந்தியாவைப்போலவே சர்க்கரைப்பொங்கல், பிட்டு, ஆப்பம் முதலிய ஆகாரங்கள் பாலி கிராமங்களில் இன்றும் செய்யப்படுகின்றன. பாலி மக்கள் நம் நாட்டினரைப் போலவே சாப்பிடுவதற்கு வாழை இலையை அதிகம் உபயோகிக்கிறார்கள். அந்தி வேளையில், ஒரு வாழை இலையில் அரிசி, புட்பங்கள் இவற்றை வைத்துப் பெண்கள் வாசலில் போடுகிறார்கள். இதனால் துர்தேவதைகள் விலகும் என்பது கருத்து.

கொஞ்ச காலத்திற்கு முன் உடன் கட்டை ஏறுதல் அந்நாட்டுப் பெண்களிடம் அதிகமாக வழங்கி வந்தது. இதை இங்கு "சத்ய" என்று கூறுகிறார்கள்.

இறந்தவர்களை தகனம் செய்வதும் அவர்களுக்குச் சடங்கு செய்வதும், பாலியில் ஒரு சிறப்பான அம்சமாகும். அதற்கு அதிகச் செலவும் பிடிக்கும். சவங்களை அலங்காரம் செய்யப்பட்ட ரதங்களில் ஏற்றித் தோளில் தூக்கிச் சென்று ஆற்றங்கரை யோரத்திலோ கடற்கரை யோரத்திலோ உள்ள புண்ணிய பூமியில், விசேட பூசைகளுடன் கிரியைகளுடன் கொளுத்துகிறார்கள். இச் சடங்கு ஒரு சந்தோஷமான காரியமாகும்.

மூன்றும் நாள் சுற்றத்தினர், சாம்பல் கரைத்து அஸ்திகளை சட்டிகளில் பொறுக்கி, அவற்றை கடலிலோ அல்லது நதியிலோ விட்டுவிடுகிறார்கள்.

பாலியின் மக்கள் மிக எளிய வாழ்க்கை நடத்திவருகிறார்கள். பண ஆசையோ, ஆடம்பர வாழ்க்கையோ அவர்களிடம் பொதுவாக இல்லையென்றே சொல்லவேண்டும். செழிப்பான பூமியும் அவர்களுக்கு இன்றியமையாத விளைபொருள்களும், அழகிய காட்சிகளும், போதிய ஓய்வு நேரமும், தெய்வபக்தி நிறைந்த பண்பாடும், இயற்கையிலேயே அவர்களைச் சிறந்த கலா ரசிகர்களாகச் செய்திருக்கின்றன.

வெள்ளி வேலை, மரவேலை, துணிகளில் சித்திரவேலை, பாய் கூடை முதலியன பின்னுதல் முதலிய சித்திர வேலைகளில் பாலி மக்கள் மிகவும் கைதேர்ந்தவர்கள். இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களிலிருந்து பல நிகழ்ச்சிகளை நடனமாகவும், நாடகமாகவும், நிழலாட்டங்களாகவும் ஆடிக்காட்டும் கலைஞர்கள் இங்கு பலர் உண்டு. தெருக்களில் இசையுடன் புராணப் பிரசங்கங்களும் நடைபெறுகின்றன. பாலித்தீவின் மக்கள் பொதுவாக இசையிலும் நடனத்திலும், நாடகத்திலும் ஆழ்ந்த பற்றும் தேர்ச்சியும் உள்ளவர்கள். அவர்களுடைய நடனங்களில் "லீ—காங்க" என்று சொல்லப்படும் நடனம் மிகவும் பழமையானதும் சிறப்பானதுமாகும். இந் நடனத்தில் பங்கு கொள்ளுபவர்கள் 18 வயதிற் குட்பட்ட பெண்களே. இன்னும் "டோபெங்க்" "பாராங்க்" என்ற சில நடனங்களையும் நாம் இங்கு காண்கிறோம். இந் நடனங்கள் சில அம்சங்களில் நம் நாட்டுமலையாளதேச கதகளி நடனத்தையொத்து இருக்கின்றன. இந் நடனங்களும், நாடகங்களும், கோயில்களிலும் மரங்களின் அடியிலும், திறந்த வெளிகளிலும் இரவில் நெடுநேரம் நடைபெறும். இங்குள்ள சங்கீத வாத்தியங்களில் மிகவும் முக்கியமானது 'கம்மலான்' என்பதாகும். மரக்கட்டைகளின் மீது பொருத்தப்பட்ட உலோகத்தகடுகளில் ஒரு மரக்கட்டையால் தட்டி அவர்கள் கல்மலானில் அழகான மணி இசையை எழுப்புகிறார்கள்.

பாலியில் இக்காலத்து சினிமாவிற்கு இடமில்லை என்றே சொல்லலாம்.

பாலித்தீவின் மக்கள் ஒருமித்து வாழ்வதை மிகவும் விரும்புகின்றவர். கிராமங்களிலுள்ள கோயில், கோயில் சாலை, வாய்க்கால் முதலிய ஸ்தலங்களை அக்கிராம மக்கள் யாவரும் ஒன்று பட்டுத் தங்களுடைய சரீர உழைப்பாலும், பண உதவியாலும், கவனித்து வருவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. தோட்ட வேலைகளிலும் வயல் வேலைகளிலும் அவர்கள் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடன் உதவி செய்து வாழ்கிறார்கள்.

ஒரு வீட்டில் ஒரு விசேஷம் என்றாலும் ஊர் பொதுக்காரியம் என்றாலும், கிராமத்தார் அனைவரும் ஒன்றுகூடி விடுவார்கள்.

பொதுக்கூட்டங்கள் கோயிலிலேயே நடைபெறும். கிராம விவகாரங்களை இரவு நேரங்களில் கோயில்களில் பஞ்சாயத்தார் விசாரித்துத் தீர்ப்பு அளிப்பார்கள். கோயிலுடைய நித்தியச் செலவுகளுக்கும் உத்ஸவச் செலவுகளுக்கும், பிறசெலவுகளுக்கும் அரிசி முதலியவற்றை ஒவ்வொரு வீட்டாரும் மாமூலாகச் செலுத்தி வருகிறார்கள்.

பாலித்தீவின்மீது விமானத்தில் பறக்கும்போதும், தரையில் பிரயாணம் செய்யும் போதும், அதன் உன்னதமான மலைகள் அடர்ந்த காடுகள் படிப்படியாக நெல்விளையும் வயல்கள், பள்ளத்தாக்குகளிலும், சமவெளிகளில் ஓடும் பலவகை ஆறுகள் ஒன்றுக்கொன்று மிகச்சிறிய தூரத்தில் அமைந்துள்ள பல்லாயிரம் கிராமங்கள், அங்குள்ள வைக்கோல் வேய்ந்த குடிசை வீடுகள், ஊர் நடுவிலும் மேட்டு இடத்திலும், வயல்களிலும் மலைகளிலும் உள்ள ஆயிரக் கணக்கான கோயில்கள். மக்களின் சாந்தமான எளிய வாழ்க்கை முறைகள் ஆகிய யாவும் நம் பழங்கால இந்திய நாட்டையும் கிராமங்களையும் நினைப்பூட்டி நம்மை மகிழ்விக்கின்றன. இவற்றைப் பார்க்கும்போது ஒரு செழித்த தமிழ்நாட்டு டெல்ட்டாப் பகுதியிலோ மலையாள நாட்டிலோ சுமார் 500 ஆண்டுகட்கு முன் வந்திருப்பது போல ஒரு பிரமைகூட உண்டாகிறது.

தில்லைத் திருக்கூத்து

சித்தாந்தச் செல்வர்,
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தம் அவர்கள்,
திருவண்ணாமலை

மார்கழித் திருவாதிரைத் திருநாளிலும், ஆனித் திருமஞ்சன நன்னாளிலும், தில்லைத்திருநகரின் கண், ஆடற் பெருமான் நிகழ்த்தும் திருக்கூத்தினைக் கண்டு களிப்பான் வேண்டிப் பெருந்திரளான மக்கள், ஆண்டுக் கூடுவதை ஆண்டுதோறும் காண்கின்றோம். கூத்தியையாத தமிழை முத்தமிழ் என்று முன்னையோர் வழங்கவில்லை. இயற்றமிழ், இசைத்தமிழ் கூத்துத் தமிழ் என முப்பிரிவினை உடையது தமிழ். அது பற்றியே இனிமை பொருந்திய மொழியாம் தமிழை முத்தமிழ் எனப் பெயரிட்டழைத்தனர். முற்காலத்தே கூத்துத் தமிழ் என வழங்கப் பெற்றதே, பிற்றைநாளில் வடமொழி வாணர்களால் வளர்க்கப் பெற்ற தமிழில் நாடகம் என வழங்கப் பெறுகின்றது. இந்நாடக நிலையே மறுமலர்ச்சி தோன்றியதின் விளைவால் திரைப்படங்களாக வளரலாயிற்று. இதனால் நாம் தெள்ளிதின் அறிவதாவது கூத்து என்பது தனித் தமிழ்ச்சொல் என்பதாம்.

பிற்பட்ட நாட்கள் வரையில்—ஏன்? இன்றுங்கூட பல சிற்றூர்களிலும் பேரூர்களிலும் கூத்துகள் நிகழ்த்தப் பெற்று வருவதைக் காண்கின்றோம். கற்றுப் பயனெய்த இயலா மக்கள் பலர் கூத்தினைக் காணும் முகத்தான் திருத்தம் எய்துகின்றதைக் காண்கின்றோம். பல நூல்களைக் கற்றுத் தேர்ந்த ஒரு பெரு நூலாசிரியன், சில முதுமொழிகளையும், அறிவுரைகளையும் ஒருங்கே சேர்த்து, நடைபெற்ற ஒரு வரலாற்றைப் பற்றியோ அல்லது இனி நடக்கக் கூடும் என்று எண்ணும் ஒரு வரலாற்றைப் பற்றியோ ஒரு கூத்து நூல் எழுதி அளிக்க,

அந்நூலின் துணைகொண்டு, அவ்வப்பாத்திரங்களின் திற னறிந்து, கூத்தர்கள் ஆடி, கூத்தின் உண்மையை உலக மக் கட்குப் புலப்படுத்துவர். கூத்தைப் பார்ப்போர் எல்லாரும் ஆறறிவு நிரம்பி, ஆண்டவனால் படைக்கப் பெற்ற மக்களினங் களே எனினும் மக்களுக்கு மக்கள் அறிவும், திறமையும், நோக்கமும், நினைப்பும், இயல்பும் ஆக்கமும் மாறுபடுவன. எல்லாரும் ஒருவித நோக்கும், நினைப்பும் உலகில் கொண்டு வாழ்வதில்லை.

உலகில் தோன்றும், கவிஞர்களும், இலக்கியச் செல்வர் களும் ஞானப் பெருஞ் செல்வர்களும், பொதுமக்களைப்போலவே தோன்றுகின்றனர். எனினும் அவர்கள் வாழ்க்கையின் வளம் எல்லாருடையதைப் போன்றமைவதில்லை. இதற்குக் காரணம் அவர்கள் எண்ணங்கள் சாதாரண மக்களுடையன போன்றவை யல்ல. சாதாரண மக்கள் வாழ்க்கையில் சிந்தனை பிறப்பதில்லை. உண்டுடுத்தி வாழ்வதே அவர்களின் நோக்கம். உலகக்கலைச் செல்வர்களும், ஞானச் செல்வர்களும், முழுநேரமும் சிந்தனையில் ஈடுபடுகின்றனர். நற்சிந்தனை என்றும் இடரைத் தோற்றாது. சிந்தனையும் தீமை வயத்தான் அமையின் நன்மை தோன்று வதற்கு மாறாகக், களவும், கொலையும், பொச்சாப்பும் தோன்றும். ஈண்டு நாம் முச்செல்வர்கள்- நிலை வேறு பட்டவர்கள் - எனினும் பொருள் வேறுபாடு கொள்ளாதவர்களைப் பற்றிச் சிந்தை செய் வோம். அவர்களில் ஒருவர் உலகக்கலைச் செல்வர். பிறஇரு வரும் ஞானக்கலைச் செல்வர்கள். முதல்வர் உலகியலை நோக் கிக் கூத்தாடும் அவைக் களத்தைக் கண்ணுறுகின்றார். பிற இருவரும், ஞானக் கூத்தாடும் - தில்லைக் கூத்தாடும் எம் பிரானைக் கண்டு களிபேருவகை கொள்கின்றனர். முன்னவர், தாம் தமிழகம் கண்ட தனிப்பெரும் அறநூற் செல்வர் திருவள்ளு வர். பின்னிருவரும் தமிழகம் கண்ட தனிப்பெரும் ஞானச் செம்மல்களான, திருநாவுக்கரசர் பெருமானும், மாணிக்கவாசகர் பெருமானும் ஆவர். இவர்கள் மூவரும் கண்டது கூத்துத்தான். முன் கூத்து நிலையாமையைப் பற்றியது. பின்னவர்கள் கூத் துக் கண்டது ஞானத்தைப் பெருக்கி அருள் வெள்ளத்தில் தோய வைத்து உலகைக் காத்து உய்வைத் தருவதாம்.

திருவள்ளுவர் கண்ட கூத்து :-

திருவள்ளுவர் பழங்காலத் தமிழர். அவர் காலத்தில் கழைக் கூத்தும், இயற்கூத்தும், இசைக் கூத்தும், சாதாரண மாக நிகழப் பெற்றவை. இவரும் ஒரு கூத்தைச் சென்று கண்டிருக்க வேண்டும். அதினின்றும் அரியதோர் சிந்தனை தோன்றுகின்றது. அந்தச் சிந்தனை உலகவரை எவ்வளவு தூரம் உய்வைப் பெறச் செய்கின்றதென்பதைக் காண்போம்?

ஆகூழின் விளைவாலும், தவமுயற்சியின் பயனாலும் ஒரு நல்லாரிடத்தில் செல்வம் சேர்வது, கூத்தாடுகின்ற மன்றத் தின் கண், கூத்தைக் காணப் பெருவிருப்புக் கொண்டு கூடும் கூட்டத்தினை நிகர்க்கும். அங்ஙனம் நல்லறத்தான், நற்றவத் தானிட்டப் பெற்ற செல்வம், நல்வழியீது எனத் தெரியாது, தீவழிகளிற் புகுதலான், அச்செல்வம் அவனை விட்டுப்போகும் நிலையானது, கூத்து முடிந்து, மன்றத்தை விட்டு வெளியேகு வோர் நிலைபோன்றதாம் என்கின்ற உண்மைக் கருத்தினை உச்சி மேல் வைத்துப் பாராட்டும் வண்ணம் வழங்கியுள்ளார் பெரு நாவலர்.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (குறள். நிலையாமை-332)

திருநாவுக்கரசர் கண்ட கூத்து :—

சொல்லின் வேந்தரான நாவரசர் தில்லை சென்று மணி மன்றுள் திருக்கூத்திடும் பிரானைக்கண்டு களிக்கின்றார். களிப் பிலே இன்ப அன்பு தோய்ந்த அருட்பாடல் முகிழ்க்கின்றது. கூத்தனை நோக்கிய அவர்க்கு முதலில் புருவந்தான் காட்சி யளிக்கின்றது. அப்புருவத்தையும் குனித்த புருவம் என்றியம்பு கின்றார். குனித்தல் என்பதற்கு ஆடுதல் என்று பொருள் இருப் பினும் ஈண்டு வளைந்த என்று பொருள்கொள்ளல் சிறப்புடைத்து. பெருமானின் கொவ்வைச் செவ்வாயினின்றும் தோன்றும் புன் சிரிப்பின் வளமையால் புருவங்களும் நன்கு வளைந்து அருட் பேறு பெறுவான் வேண்டிச் செல்கின்றவர்களை வருகவென அழைகின்றது. தில்லைப் பெருமானின் வளைந்த புருவமும் கொவ்வைப் பழம் போன்ற சிவந்த வாயிதழ்களிடத்தில் தோன்

றும் சிரிப்பும், குளிர்ச்சி பொருந்திய சடையும், பவளம்போன்ற நிறமுடைய திருமேனியையும், நன்மை தருவதாய திருவடிகளையும் காணப்பெற்றால், மனிதப் பிறவியும் இம்மாநிலத்தின்கண் வேண்டுவதேயாகும் என்கின்றார். சிலர் அவனை நேரில் கண்டு, கண்டு, அவன் திருவுருவத்தில் ஈடுபாடு கொண்டு, நயந்து, மனமொன்றி நிற்பர். சிலர் அவனைக் கண்டு கண்மூடி மௌனிகளாக மாறி, சில சிற்றறிவும் பெருந் தொழிலும் பூண்ட உயிரினங்களை முன்னிலைப் படுத்தி, உண்மை தேர்ந்து, மெய்ம்மை தெளிந்து செம்மை நிலை எய்துவர். இங்ஙனம் செம்மை நிலையெய்தியவர்களில், முன்னவர், திருநாவுக்கரசர் பெருமான். பின்னவர் மாணிக்கவாசகர் பெருமான். ஆளுடைய அடிகளின் இன்னியற் செம்மைப் பேற்றைப் பின்னர் கண்டு களிப்பாம்.

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண்சிரிப்பும்,
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால்வெண்ணீறும்,
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்,
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே! (திருநாவுக்கரசர் தேவாரம்)

மாணிக்க வாசகர் கண்ட கூத்து:—

நிமலனின் அருளிற் றோய்ந்த புனிதன்; நிறைந்த அருளாளன்; அன்பின் கசிவில் தோய்ந்து தெளிந்த ஞானி. உலகியற் செல்வங்கள் என்றும் அழிதன் மாலையவை என்கின்ற பேருண்மையினை மனத்தே கண்ட பெருஞ் செல்வன். எப்பொழுதும் ஞான நாட்டத்தில் ஈடுபாடு கொண்டு, தவம்புரிந்து, தண்மலர் தூவி இறைவனை வழிபட்ட ஞானச் செல்வன்; குடம்பை நிலையற்ற தென்ற தெளிவுண்மையை உள்ளத்தே ஆய்ந்தோர்ந்து, உலக மக்கட்கு உள்ளொளி கொளுத்திய நல்லோன். இத்தகைய மேதகு சிறப்புக்கள் ஒருங்கே அமையப் பெற்று வாழ்ந்த தவச்செல்வரே மாணிக்கவாசகர் பெருமான். திருநாவுக்கரசர் பெருமான் சரியைத் தொண்டியயற்றி, இறைவன்

திருவடிப்பேறெய்தினர். மாணிக்கவாசகர் பெருமானே ஞான வடிவில் அமர்ந்து யோகத்திலாழ்ந்து, இறைவன் திருவடிப் பேற்றிற்கு இலக்காயினர். சரியைத் தொண்டு (Manual Sacrifice) ஞானத் தொண்டு. (Wise-Sacrifice) சரியைத் தொண்டால் கண்ட நாவரசர் உருவத்தின் தன்மையோர்ந்து பாடினர். ஞானத் தொண்டில் ஈடுபாடு கொண்ட மாணிக்க வாசகர் மனத்தால் தில்லைத் திருக்கூத்தன் பெருமையைப் பல கால் சிந்தித்துப் பாடும் பொழுது, பெருமானின் உருவத் தோற்றங் காட்டி உண்மை புகட்டாது, பெருமானின் அருவுரு வத் தோற்றத்தையே கண்டு களித்து ஈண்டு, கூத்தின் பெருமை யைப் பெருக வைக்கின்றார்.

கோத்தும்பி! தினையளவினதாக உள்ள தேனிறைந்த பூக்கள் பால் சென்று, தேனினை யுண்பதை விடுத்து, நினைத் தாலும், பேசினாலும், எல்லாப்போதிலும், உடற்கட்டில் உள்ள எல்லா எலும்புகளும் உள்ளே நெகிழ்ந்து, ஆனந்தத் தேனினைச் சொரியும்,ஆடுகின்ற திருப்பாதங்களிடம் சென்று ஊதுவாயாக, என்று பொருள் தோன்றும்படிப் பாடியுள்ளார் ஞானப்பெரு மகன். இதனால் அவர் உலகவர்க்கு அறிவுறுத்தும் உண்மை யாவது :— நல்லறத் துறைகளில் நாளும் சிந்தை செய்து நல்லன பெற்றுச் சிறந்து, அவனடிப் பேற்றின் திறனறிதலே வாழ்கையின் பயன் என்றுணர்த்தியவாறு.

தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

(திருவாசகம் - கோத்தும்பீ - 3)

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 13. இதழ் 4-ன் தொடர்ச்சி]

I

SAMBANDAR

(Tamil: TIRU JNANA SAMBANDAMURTI SWAMI)

18. புத்தரோடுபொறியில்சமணும்புறங்கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தெனதுள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்ததோர்மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவியபெம்மானிவனன்றே.

Our present writer's poems contain such frequent denunciations of Buddhism or Jainism that it is clear that they were written at a time when the struggle between Hinduism and these other religions was at its height. Buddhism and Jainism are scarcely known in South India to-day, though at one time they were supreme. It is probable that these songs helped not a little to drive them out of the country.

18. Those Buddhists and mad Jains may slander [speak.
Such speech befits the wand'rers from the way.
But He who came to earth and begged for alms,
He is the thief who stole my heart away.
The raging elephant charged down at Him;
O marvel! He but took and wore its hide;
Madman men think Him, but He is the Lord
Who in great Bramapuram doth abide.

(To be Continued)

LEPAKSHI

BY

"RASIKA"

The quest for objects d'art is often an arduous one, but when one braves the rigours, the visit becomes well worth it. Tucked away in the southernmost recess of Andhra Pradesh, about eight miles to the railhead of Hindupur, is Lepakshi, enshrining in its smallish temple some magnificient works of sculptor's art and that of the painter.

Virupanna, the donor and the mastermind behind the structure, was a noble man and merchant prince in the court of Krishna Deva Raya, the greatest of Vijayanagar Emperors. He conceived the idea of building a temple to his patron deity, Virabhadra, but more as an imperishable monument of art. Funds for such an ambitious venture he lacked, but he had the state funds at his diposal, a better purpose for which he could not conceive. Also, he knew his master well. To Krishna Deva Raya, a creator or sponsor of fine art could do no wrong. Virupanna's utilisation of the State funds for this purpose would not only be condoned but actually euologised. Unfortunately, Krishna Deva Raya was only a mortal and went the mortal way before the completion of the temple. His successor, Rama Raya, had different ideas. He liked the arts, but not at the expense of state coffers. Virupanna was ordered to the court under arrest, but he knew what was in store for him. Rather than

---

Reproduced with the kind permission of the chairman of the Souvenir Committee of 'VIJAYAM'.

suffer punishment at the royal hands, he chose to put out his own eyes. In one of the temple walls, the visitor is shown two steel pins sticking out, with two red streaks in the granite, flowing down, as the spot where Virupanna dug out his eyes. Whatever be the veracity of this story, the red streaks in the granite could not have served a better purpose. One is saddened by the fate supposed to have overtaken this master-mind, and tragedy adds glamour to the place.

The temple stands on a rock, with a platform like plinth. Fortress like walls enclose the structure. One enters through the southern gate which leads to a rectangular prakara with pilastered verandas, beautifully carved. In the inside court stands the un-finished and unroofed Kalyana Mandapa, with pillars containing exquisite statutory of Gods, Goddesses and Rishis, in classic postures. To the east is a huge monolithic Ganapathi, and further east is one of the best pieces of sculpture that could be found anywhere. It is a huge five headed Naga, shading a Siva Lingam. The coils of the serpent forms the pedastal for the Lingam. The total height of the Naga Lingam is over twenty feet, and is sculptured out of the edge of a single rock. It faces due east, and the first rays of the rising sun fall on it.

Proceeding inside, one enters the Sanctum Sanctorum, through the Natya Mandapa and the Ardha Mandapa. The presiding deity, Virabhadra occupies the cell to the west, flanked by two cells for Papanaseswara and Mahavishnu. There is also a shrine for Durga. On the ceiling is a huge mural, that of Durga Devi, sixty feet long, beautifully executed. On both sides of the figure of the Goddess stand a male and a

female figure, that of Virupanna and his consort, decked in all the finaries of contemporary costume.

Coming out, the splendid sculptures of the Natya Mandapa arrest attention. Bikshatana Siva, and Urvasi and particularly the latter, are exquisite pieces. The palm however, is carried away by the hanging pillar, carved from above, and almost touching the floor but not quite-a marvel, of the sculptor's art indeed.

Much has already been said of the murals of Lepakshi mostly found on the Natya Mandapa. They are mostly faded, but on whatever remains, one can feast his eyes for grace of form and deftness of strokes. The colouring is subdued and has a soothing effect.

Epigraphic records in the temple itself dates its construction as 1538.

About a furlong in the temple sits a huge monolythic bull, Nandi, of fine proportion, comparable with those at Chammundi hills, Basavangudi and Tanjore.

Andhra Pradesh has many interesting sites to gladden the lover of art, and Lepakshi, though comparatively less known, has a claim for being placed among the best.

உ

திருச்செந்திலாண்டவன் துணை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு

★

[புதிய மலிவுப் பதிப்பு — 1961]

புதிய பதிப்பு பிரதி ஒன்றின் விலை ரு. 3–50 ந. பை. ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

(முந்தின பதிப்பு பிரதி ஒன்றின் விலை. ரு. 6/–)

(தபால் கட்டணம் வேறு)

768 பக்கங்கள் கொண்டது. (128 + 621 + 19) உயர்ந்தரக வெள்ளைத்தாளில் பெரிய எழுத்தில் தெளிவாக அச்சிடப் பெற்றது.

டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய குறிப்புரை, ஆராய்ச்சி, முதலியவற்றுடன் கூடியது.

ஒரே சமயத்தில் 5 பிரதிகளும் அதற்குமேலும் வாங்குபவர்களுக்கு 20% கழிவு உண்டு.

இதன் விற்பனைத் தொகை ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தைச் சாரும்.

கிடைக்குமிடம்:–

ஸ்ரீ T. M. குமரகுருபரன் பிள்ளை அவர்கள் B. A., B. L.,

வழக்கறிஞர்

ஸ்ரீவைகுண்டம் P. O. :: (திருநெல்வேலி மாவட்டம்)

தமிழிலக்கியமும் சமயதத்துவமும்

திரு. இரா. நடராசன் அவர்கள் எம். ஏ., எம். லிட்.,
புது தில்லி – 5

இலக்கியமும் தத்துவமும் இணைபிரியாதவை. இலக்கியம் தத்துவம் கூறும் உண்மைகளுக்கு உயரிய வடிவம் கொடுத்து அவைகளை அனைவரும் அறியுமாறு செய்கின்றது. உண்மைகளுக்குத் தக்க உருவம் அமைத்து வெளியிட்டுப் படிப்போர்க்கு இன்பம் தருவதே இலக்கியம் என்று ஒர்ஸ்போல்டு (Worsfold) என்ற ஆங்கில அறிஞர் அறிவிக்கின்றார். மணிகளினிடையே நூல் இருப்பது போன்று தமிழிலக்கியங்களுக்கு இடையே தத்துவம் இருக்கின்றது. சமய தத்துவங்களை விளக்குவதற்கு எழுந்த சைவ சித்தாந்த சாத்திரங்களும், தேசிகப் பிரபந்தம் போன்ற வைணவ நூல்களும், தத்துவ நூல்களாக அன்றித் தத்துவ இலக்கியங்களாகத் திகழ்கின்றன. அவை இலக்கிய நயத்துடன் தத்துவங்களை விளக்குவதால்தான் புகழுடன் விளங்குகின்றன என்று கூறினால் அது மிகையாகாது. இனி, தமிழிலக்கியங்கள் தத்துவத்தை எவ்வாறு நயம்பட விரித்துரைக்கின்றன என்பதற்குச் சில சான்றுகளைக் காண்போம்.

திருக்குறள்:- உயிரானது வினைக்கு ஏற்றவாறு பல பிறவிகளை எடுக்கும்; அது இறைவனது திருவடியைச் சரணடைந்தால் முத்திபெறும் என்ற தத்துவக் கருத்தை, தெய்வப் புலவர் திருவள்ளுவர் பிறவியைக் கடலாகவும், இறைவனது திருவடியைக் கரையாகவும் உருவகித்து எத்துணை நயமாக விளக்கி இருக்கின்றார் !

“பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்”

இதனை விளக்குவான் போன்று மாணிக்கவாசகர், பிறவியைக் கடலாகவும், துன்பத்தை அலையாகவும், பெண்களைக் காற்றாகவும், காமத்தை விழுங்கவரும் சுறாமீனாகவும் திருவைந்

தெழுத்தைத் தெப்பமாகவும் இறைவனது திருவடியைக் கரையாகவும் உருவகித்துப் பாடியிருப்பது நம் மனத்தில் எந்நாளும் இருத்தத்தகும் பெற்றிவாய்ந்ததன்றோ?

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
 தடந்திரையால் எற்றுண்டு பற்றென் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
 கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமாறு என்றென் றெண்ணி
 ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
 கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே"

சிலப்பதிகாரம்:- ஓங்கி உலகளந்த உத்தமன், கடல்மடை திறந்தன்ன அன்பர் அன்பிற்கு எளியவன் என்ற கருத்தை இளங்கோவடிகள் இனிது விளக்குகின்றார். "மந்திர மலையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி, பாற்கடலைக் கலக்கிய நீ, யசோதையினால் கட்டுண்டாயே! உலகத்தையே உண்ட நீ, களவுசெய்து உறியில் வைத்திருந்த வெண்ணெயைத் தின்றாயே! தேவர்களும் திரண்டு வணங்கித் துதிக்கின்ற மூவுலகங்களையும் அளந்த நின் திருவடிகள், பாண்டவர்களுக்காகத் தூது சென்றனவே! இவையெல்லாம் என்ன மாயச்செயல்கள்! மிகவும் வியப்பைத் தருகின்றனவே!" என்று பழிப்பதுபோல் புகழ்ந்து பாடி, இறைவன் அடியவர்க்கு எளிவந்து அருளும் பிரான் என்பதை எவ்வளவு நயமுற விளக்கியுள்ளார் என்று பாருங்கள்.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே!
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே."

"அறுபொருள் இவனென்றே அமரர்கணம் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே உலகடைய உண்டனையே!
உண்டவாய் களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்
வண்துழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே."

“திரண்டமரர் தொழுதேத்தும் திருமால் நின்செங்கமல
இரண்டடியான் முவுலகும் இருள்தீர நடந்தனையே!
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே.”

மணிமேகலை :– ஆதிரை பிச்சையிட்ட காதையில் சாதுவன் நாகர் தலைவனுக்குப் புத்தசமயத் தத்துவங்களை எளியமுறையில் விளக்குகின்ருன். கொடுமையின் வடிவாக இருந்த நாகனுக்கு, எளிய எடுத்துக் காட்டுக்களின் மூலம் உயிர் என்ற ஒன்று உண்டு என்பதைக் கூறி, பிறத்தலுக்கும் இறத்தலுக்கும் உறங்கலும் விழித்தலும், ஆகிய எளிய உவமைகளைக் கூறி விளக்கி நல்லறிவு கொளுத்துகின்ருன்.

“பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறம் செய்வோர் நல்லுலகு அடைதலும்
அல்லறம் செய்வோர் அருநரகு அடைதலும்.”

இதனைத்தான் திருவள்ளுவர்,

“உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.”

என்று கூறியுள்ளார். சாத்தனர் இங்கு நாகனைப் போன்ற கொடியவர்களும் புத்த சமயத்தால் திருந்துவார்கள் என்று குறிப்பாகக் காட்டியுள்ளார். புத்த சமயக் கருத்துக்களைத் தன் கூற்றில் கூருது, கதைக்கு நாடக வடிவம் கொடுத்து அதன் இடையே விளங்க வைத்திருப்பது சாத்தனரின் கவித்திறனைக் காட்டுகின்றது. ஏனைய பெருங்காப்பியங்களும், சிறு காப்பியங்களும், பௌத்த சமய தத்துவங்களையோ அல்லது சமண சமய தத்துவங்களையோ விளக்குகின்றன என்பது அனைவரும் அறிந்தது.

தேவாரம் :– சமயநூல்களில் தேவாரம், பிரபந்தம் போன்றவைகளைத் தோத்திரமாகவும், மெய்கண்ட சாத்திரம் போன்றவைகளைச் சாத்திரமாகவும் பிரிக்கின்றனர். ஆனல் தோத்திரப் பாக்கள் ஓரளவிற்குத் தத்துவங்களையும் விளக்குகின்றன என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

திருநாவுக்கரசர் 'நான்' என்னும் பிடித்தலைதயே சாதிக்கும் பேராணவம் அழிந்த பின்னர்தான் இறைவனோடு இரண்டறக் கலக்கலாம் என்ற உண்மையை, ஆன்மாவைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் தத்துவப் பொருள் கொள்ளுமாறு, அகப்பொருள் துறையில் பாடி அறிவித்திருப்பது நயம் நனி சிறந்துள்ளது.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

திருவாசகம்:— இறைவன் இன்ன தன்மையன் என்று அறிய ஒண்ணாதவன் ஆயினும், பார்க்கின்ற இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்பதை மணிவாசகப் பெருந்தகையார், பூவில் மணம் நிறைந்திருப்பது போல இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான் என்று அருளிச்செய்துள்ளார்.

"சொற்பதம் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
பூவினில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை".

இக்கருத்தினைத்தான் அப்பர் அடிகளும்,

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

என்று இனிது இயம்பியுள்ளார்.

திவ்வியப் பிரபந்தம்:— இறைவனிடம் தன்னை ஒப்படைத்து விடுவதுதான் முத்திநெறி என்பது ஆழ்வார்களின்

கருத்து. இவ்வாறு நின்றுலகு அளந்த நேமி நெடியவனிடம் சரண்புகுதலே 'பிரபத்தி மார்க்கம்' என்று வைணவர்கள் விளம்புவார்கள். வாதவூர் அண்ணலும் பரமனிடம் தன்னை அடைக்கலப் பொருளாக ஏற்றருளுமாறு விண்ணப்பித்திருக்கின்றார். பிணியாளன் எவ்வாறு தன்னை மருத்துவனிடம் ஒப்படைத்து விடுகின்றானோ, அதே போன்று வித்துவக்கோட்டம்மானிடம் தன்னை ஒப்புவித்து விடுவதாகக் குலசேகர ஆழ்வார் ஒருவர் அருளிச் செய்திருக்கின்றார்.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மாஉன்
ஆள்ா உனதருளே பார்ப்பன் அடியேனே."

மேலும் அவரே தாய் கோபித்துக் கொண்டு விலகினாலும் சேய் அவளது முகத்தையே நோக்குவது போலத் தாமும் கடவுளின் அருளையே நோக்கியிருப்பதாகப் பாடியிருக்கின்றார்.

"தருதுயரம் தடாயேல்உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தே அழுங்குழவி அதுவேபோன் றிருந்தேனே."

வைணவர்களின் தத்துவ நூலாகிய தேசிகப் பிரபந்தத்திலும், வேதாந்த தேசிகர் 'அடைக்கலப்பத்து' என்ற பகுதியில், 'பிரபத்தி மார்க்கத்தை' நன்றாக விவரித்து இருக்கின்றார். அடைக்கலப்பத்தின் முதல் பாடலிலேயே எல்லா இடங்களிலும் ஓடிஇளைத்து வீழ்ந்து இராமனிடம் அடைக்கலம் அடைந்த காகாசுரன் போன்று தாமும், 'உமதடிகள் அடைகின்றேன் என்று ஒருகால் உரைத்தவரை, அமையுமினி என்பவர்போல் அஞ்சல் எனக் கரம் வைத்துள்ள' அத்திகிரி அருளாளனிடம் அடைக்கலமாக அடைந்துள்ளதைக் குறிப்பிடுகின்றார்.

"பத்திமுதலா மவற்றில் பதியெனக்குக் கூடாமல்
எத்திசையும் இளைத்தோடி இளைத்துவிழும் காகம்போல்,
முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிநகர்
அத்திகிரி அருளாளன் அடியிணையை அடைந்தேனே."

கம்பராமாயணம் :— கவியரசராகிய கம்பர், ஒவ்வொரு சமயமும் இறைவனுடைய ஒவ்வொரு தன்மையை அறிந்து அவனுடைய முழுத்தன்மையை அறியாதவாறு போல, மிதிலை நகரமகளிரும் இராமனுடைய ஒவ்வொருஅவயவத்தின் அழகினை அறிந்து மற்றவற்றின் அழகினை அறிந்திலர் என்று நயம்படச் செவ்விய தீந்தமிழில்கூறியிருப்பது யாவரும் அறிந்ததொன்று. உயர்ந்த தத்துவக் கருத்தைச் சிறந்த இடம் ஒன்றில் எவ்வளவு அழகாக அமைத்துத் தந்துவிட்டார் பாருங்கள்.

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழல் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கை கண்டாரும்.:.தே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னால் உருவுகண்டாரை ஒத்தார்".

திருமந்திரம் :— திருமூலரின் திருமந்திரம் தத்துவக் கருத்துக்கள் நிறைந்தது. உடம்பு இழிவு என்பாரை நோக்கி, உடம்பு உத்தமனைக் காண்ப தற்காக நமக்குத் தரப்பட்டிருக் கின்றது என்று தெளிவாகத் திருமூலர் இலக்கிய நயத்துடன் காட்டியுள்ளார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே."

இறைவனை அடைய அறுவகைச் சமயங்கள் உள. அவை ஒரு பெரிய ஊரை அடைவதற்கு உள்ள பல பாதைகளைப் போன்றன. அவைகளில் இது நன்று; இது தீது என்று கூறுப வர்கள் குன்றைப் பார்த்துக் குரைக்கும் நாய்களுக்கு ஒப்பாவார் கள் என்றும் கூறியுள்ளார்.

"ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே."

(வளரும்)

நூல்

சமய ஆசார விளக்க வினவிடை

திரு. T. சாமிநாத சிவாச்சாரியர் அவர்கள்.

[மலர் 13. இதழ் 4-ன் தொடர்ச்சி]

24. வினு: எண்ணெய் பால்நெய் இறைவனுக் காட்டின்
நண்ணும் பயன்என் புண்ணிய குருவே?

(இதன் பொருள்) புண்ணிய சொருபராகிய ஆசாரியரே! சிவபிரானுக்கு எண்ணெய், பால், நெய் முதலியவைகளை அபிடேகம் செய்தால் வரும் பயன் யாது?

விடை: கைச்செக்கால் ஆட்டி வாசிக்கச் செய்த தைலமாகிய எண்ணெயை அபிடேகித்தால், வாயு லோகத்தை அடைந்து அங்குள்ள போகத்தை அநுபவித்திருப்பதும், பால், நெய் இவைகளை அபிடேகம் செய்தால் வெள்ளி விமானத்து ஏறிச் சென்று சந்திர லோகத்தை அடைந்திருப்பதும் பயனுகும்.

25. வினு: பஞ்ச கவ்வியம் பஞ்சா மிருதத்தால்
விஞ்ச ஆட்டின் விளைபயன் யாது?

(இ-ள்.) நித்திய, நைமித்திய காலங்களிலே சிவபிரானுக்குப் பஞ்ச கவ்வியம், பஞ்சாமிர்தங்களை விதிவழித் தாபித்து அபிடேகம் செய்யில் அடையும் பயன் யாது?

விடை: பசுவினிடத்திலே சகல தேவதைகளும் இருக்கையால் அதனிடத்து உண்டாகிய பஞ்ச கவ்வியத்தை அபிடேகம் செய்தால் சகல பாவங்களும் நீங்கி மோக்ஷத்தை அடைவார்கள். பஞ்சாமிர்தங்களை அபிடேகம் பண்ணினல் இட்ட சித்திகளைப் பெறுவார்கள்.

26. வினு: விண்ணேர் பிரானைத் தெண்ணீர் அதனல்
ஆடிய பண்ணின் நீடிய பயன் என்?

(இ-ள்.) தேவ தேவனுகிய சிவபிரானை வடித்து மணம் கட்டிய சுத்த ஜலத்தால் அபிடேகம் செய்வித்தால் வரும் நீண்ட பயன் யாது?

விடை: அபிடேகம் செய்தவர், செய்வித்தவர் தமது ஆணவமலம் நீங்கி, மேலான சிவலோகத்தை அடைந்திருப்பர்.

27. வினு: திண்ண மாகத் திருவொற் றுடை
சாத்தி ஆதனத் தேற்றி வைத்தே
ஆதார சத்திமுதல் ஓதிய சத்தி
மண்டலம் ஈருத் தொண்டர் அருச்சித்து
என்பயன் குருவே அன்பால் அருளாய்?

(இ-ள்.) உறுதியாகத் திருவொற்றுடை புனைந்து சிவபிரானை அலங்கார ஆதனத்தின் மேல் பூருவாபி முகமாக எழுந்தருளப் பண்ணி ஆதார சத்தி முதல் சத்தி மண்டலம் ஈருக லயாங்க பூசையையும், பிரமாங்க முதலிய போகாங்க பூசையையும் பக்தர்கள் செய்தால் பயன் யாது? ஆசாரியரே! அருள்வீராக.

விடை: ஆன்மாக்கள் போகாங்கத்தால் சுத்த சாட்குண்ணியத்தை அடைவதும், லயாங்கத்தால் சிவபிராைேடு அடைக்கலம் ஆவதுமே.

28. வினு: ஓதிய சோட சோப சாரத்தை
ஆதிக் களித்தால் ஆவதென் குருவே?

(இ-ள்.) ஆசாரியரே! உபசாரங்கள் ஆயிரம் முதலிய பல என்று ஆகமங்கள் கூறி இருக்கவும், ஆசனம், ஆவாஹனம், பாத்தியம், ஆசமனம், அர்க்கியம்,ஸ்நானம், பரிவட்டம், கந்தம், புட்பம், நைவேத்யம், தாம்பூலம், தூபம், தீபம், திரு ஆலத்தித் தட்டு, திருநீறு, சுத்தோதகம் என்னும் பதினுறினையும் சிவபிரானுக்குக் கொடுத்தலால் உண்டாகும் பயன் யாது?

விடை: இங்ஙனம் கூறிய பதினுறும் சௌக்யகன்மம் எனப் பெயர்பெறும். ஆதலால் இம்மைக்கண் போகத்தையும் மறுமைக்கண் மோட்சத்தையும் அடைவதுவே இவற்ருல் பயனுகும்.

29. வினு: பவித்திரம் சாத்தின் பயன்என் குருவே?

(இ-ள்.) சுத்தனுய் இருக்கிற சிவபிரானுக்குப் பவித்திரம் சாத்துவதனுலே என்ன பயன்? ஆசாரியரே!

விடை : புத்தி காமன், முத்தி காமன் இருவரும் தமக்கு ஏற்ற மந்திரங்களை முறையாக உச்சரித்து மனவாக்குக் காயங்களிலே உண்டாகிய தாபத்ரயங்களைப் போக்கி அவை புனிதம் அடையச் செய்வதுவே.

30. வினு : அக்கினி காரியம் சிக்கென இருந்து
பண்ணில் பயன்என் விண்ணேர் பிரானே?

(இ-ள்.) தேவர்களுக்கும் தேவனே! நித்யாக்னியைத் திடமாக இருந்து பண்ணினுல் உண்டாகும் பயன் யாது?

விடை : ஆன்மா செய்த நூனுதிக வைகுல்லியங்கள் எல்லாம் தகித்துப் பூசா பலத்தை அடையும் பொருட்டு என்க.

31. வினு : அட்ட புட்பம் வெட்டெனச் சாத்தின்
கிட்டும் பயன்என் மட்டவிழ் சடையாய்?

(இ-ள்.) மணம் பொருந்திய சடாபாரத்தை உடைய ஞானுசாரியரே! சிவபிரானுக்கு எட்டு புட்பங்களைச் சாத்தினுல் உண்டாகும் பயன் யாது?

விடை : ஞான பூசைக்குக் கருவியாகிய கொல்லாமை முதலிய எண்வகைக் குணங்களும் பெறுவது என்க.

32. வினு : ஏத்தி ஈசனே மூர்த்தி பண்ணி
அழுந்தப் பெட்டகத் தெழுந்தருள் வித்துச்
சண்ட பூசை தொண்டால் பண்ணில்
வந்த பயன்என் எந்தாய் அருளாய்?

(இ-ள்.) தோத்திரம் செய்து மூர்த்தி பூசனையை உபதேச முறையால் உணர்ந்து செய்து பராமுக அர்க்கியம் கொடுத்து பெட்டகக் கோயிலிலே எழுந்தருளுவித்துச் சண்டேசுர பூசையை வழிபாட்டினுல் இயற்றில் உண்டாகும் பயன் யாது? என்னுடைய சுவாமியே! அருளு வீராக.

விடை : சரலிங்க பூசையாகில் அசுத்த தத்துவத்திலே அபிமுகமாக இருந்து பூசை கொண்ட சிவனை முன்பு போலச் சுத்த தத்துவத்திலே ஊர்த்த சிந்தா குலராய் இருக்க என்று பராமுக அர்க்கியம் கொடுத்தும், மண் முதலியவற்ருல் செய்த

க்ஷணிக லிங்க பூசையாகில் முன்பு போலப் பராமுக அர்க்கியம் கொடுத்து அந்த லிங்கத்தை விசர்ச்சனம் செய்து இருதயத்திலே ஒடுக்கியும், சண்டேசுவர பூசை பண்ணாத விடத்துச் சிவ பூசை பலன் கிடையாது. ஆதலால் அவரைப் பூசித்து அப்பலன் பெறுவது என்க.

33. வினா: மாசற நாளும் மாயே சுரரை
ஆசறப் பூசித்து அடைபயன் யாது?

(இ-ள்.) இவ்வாறு சிவ பூசை செய்து முடித்த பிறகு குற்றம் அற நாள்தோறும் மயேசுரரை விதிப்படி பூசித்து அடையும் பலன் யாது?

விடை: பூசிப்போர் தமது தொழிற்குற்றமாகிய அலகிடல் மெழுகல், அங்கி மூட்டல், நீரெடுத்தல், அரிசி குற்றல் என்னும் ஐந்தினாலும் உண்டாகிய குற்றம் நீங்குதல் பயனாகும்.

முற்றும்

இராகம்: கரஹரப்ரியா தாளம்: ஆதி

பல்லவி

பாடிடுவாய் மனமே — குகனை
நாடிடுவாய் தினமே கணமே (பாடிடு)

அனுபல்லவி

தேடிடுவாயே தொண்டு செய்வாயே
பாவியானாலும் செய்த பாவங்களை மறந்து (பாடிடு)

சரணங்கள்

1) பெண்மோகம் கொண்டுநீ பேய்போல் திரியும் அற்ப
பேதைமை கொண்டலையும் பித்தர் போலல்லாமல்
மண்ணில் துயர்விளைக்கும் மாதர்தமை அடுத்து
மயங்கி மடியாமல் மகிபன் அடிபணிய (பாடிடு)

2) இத்தனை ஜென்மங்கள் எடுத்து இளைத்தாலும்
எத்தனை துன்பங்கள் இடையில் வந்திட்டாலும்
அத்தனையு மறந்து இத்தினத் தாகிலும்
சிற்சபை நாதன்தன் குமரனை அனுதினம் (பாடிடு)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

முதுமொழி விளிவெண்பா

புலவர், பனசை, திரு. சு. சடையப்பன் அவர்கள்
தமிழாசிரியர், கழகப்பெரும்பள்ளி, பெருந்துறை.

சொல்வன்மை

பெண்புலவர் அவ்வையார் பேசினரோ பல்சொல்லால்?
எண்ணி 'வரப்புயர' என்றூர்காண் — கண்ணே!
பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர். 1

நிலையாமை

பானிலவில் அன்றியாம் பாரியுடன் வாழ்ந்தோமென்(று)
ஏனவனின் பெண்மக்கள் ஏக்குற்ருர்? — தேனே!
நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் உலகு. 2

கண்ணோட்டம்

வஞ்சத்தார் நஞ்சூண்டும் வையத்துத் துஞ்சிலரே
அஞ்சாத நெஞ்சினராம் அப்பர்காண் — நெஞ்சே!
பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 3

காலமறிதல்

ஏறி யிமயத் தெழில்முடியைத் 'தென்சிங்'தான்
ஈறில் புகழ்காண எட்டினனே — ஏறே!
அருவினை என்ப உளவோ? கருவியான்
காலம் அறிந்து செயின். 4

சொல்வன்மை

சீர்சத் தியமூர்த்தி செந்நாத் திறத்தாலே
பாரோரைத் தம்பக்கம் பற்றினர்பார்! — நேரில்லோய்

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 5

குடிமை

வெள்ளையர் வெண்பணத்தால் வீர சிதம்பரனூர்
உள்ளத் துறுதி உடைந்தாரோ? — கிள்ளாய்
அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 6

மானம்

நெஞ்சூடு சென்றவேல் நீள்புறத்துப் புண்ணுணித்
துஞ்சினன் சேரலா தன்னென்பான் — நெஞ்சே!
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 7

அறிவுடைமை

சேய்க்குத்தாய் தானென்று சாலமன்முன் தாயிருவர்
போய்ச்சொல்ல ஆய்ந்தறிந்தான் பொய்த்தாயை—ஆய்தொடி
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் [யாய்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 8

இன்னாசெய்யாமை

சந்திரனின் தந்தையைச் சாகடித்த நந்தர்கள்
சந்திரனால் சாய்ந்த சரிதைகேள் — இந்தே!
பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 9

படைமாட்சி

சின்னமலை தான்தனியாய்ச் சீறிவந்த வெள்ளையர்
பன்னெடுந் தானை படுத்தானே — பொன்னே!
ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 10

திருவிளக்கு எரித்தல்

திரு. ப. நடேசன் அவர்கள்
திருவள்ளுவரகம், கரிச்சிப்பாளையம்

திருவிளக்கின் மேன்மை :-

பண்டைக் காலந்தொட்டு நமது நாட்டில் உள்ள திருக் கோயில்களில் நெய்யால் திருவிளக்கெரித்தல் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சைவ, வைணவ, சமணக் கோயில்கள் எல்லாவற்றிலும் திருவிளக்கு வைத்தல் உண்டென்பதைக் கல் வெட்டுக்களால் நன்கு உணரலாம். 'விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினல் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டிபோல்வார் இறைவர்' என்பதை மக்கள் யாவரும் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே, திருவமுது படைத்தலைவிட மிகவும் சிறப்பாகவே திரு விளக்கு எரித்தலைக் கருதி வந்தனர் என்று நினைக்க முடிகிறது. இது 'சாமுண்டப்பை வைத்த திருநுந்தா விளக்குச் சாசனத் தால்' நன்கு அறியலாம். அச்சாசனத்தில் சாமுண்டப்பை என்பாள் திருவிளக்கெரிப்பதற்கும், திருவமுதுக்கும் முறையே காசு இருபதும், பத்தும் தானமாகக் கொடுத்துள்ளாள், என்ற செய்தி கூறப்படுகிறது. சாமுண்டப்பை, திருவிளக்குக்கு, திரு வமுதைவிடப் பத்துக்காசு அதிகமாகவேதானம் அளித்துள்ளாள் என்பதால் அதன் மேன்மை நன்கு விளங்கும்.

"அஞ்செழுத்தும் திருநீறும் கண்டிகையும் பொருளாகக் கொண்ட நாயன்மார்கள்" அறுபத்து மூவரில் திருவிளக்கு எரித்தலைச் சிறப்பாகக் கொண்டவர்கள் மூவர் ஆவார்கள். ஒருவர் நமிநந்தியடிகள். மற்றொருவர் கணம்புல்லர். இன்னொரு வர் கலியநாயனர் ஆவர். இவர்கள் வறுமை முதலிய இடுக்கண் வந்துற்ற நிலையிலும் தமது வழிபாட்டை விடாதுசெய்து வந்தார்கள். அவர்களைப்பற்றி முறையே சிறிது அறியலாம்.

நமிநந்தியடிகள்:— இவர் பொன்னித் திருநாட்டில் உள்ள ஏமப்பேறூரில் சைவ அந்தணர் குலத்தில் அவதரித்தார். இவர் நாடோறும் திருவாரூரை அடைந்து அங்கு எழுந்தருளியுள்ள பெருமான் திருவடிகளை வணங்கும் பேற்றினை மேற்கொண்டார். ஒருநாள் புற்றிடங்கொண்ட பெருமானை வணங்கிக்கொண்டு அதன் அருகிலுள்ள "அரநெறி" என்னும் ஆலயத்தை அடைந்தார். அரநெறியப்பரை வணங்கினர். அங்கு இரவில் எண்ணில்லாத திருவிளக்கேற்ற விரும்பினர். தமது இல்லம் சென்று நெய் கொண்டுவரப் பொழுது இல்லாததால் அருகிலுள்ள மனையொன்றினில் சென்று, "சிவாலயத்தில் விளக்கேற்ற நெய், தாருங்கள்" என்றார். அம்மனையானது சமணர் மனையாதலால் உள்ளிருந்தார் நகைத்துப் பின், "கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகை காணும்; நெய்யிங்கில்லை; விளக்கெரிப்பிராகில் நீரை முகந்தெரித்தல் செய்யும்" என்றார்கள். அதுகேட்டு வருத்த முற்றிருக்குங்கால் விசும்பிடையே ஒரு வாக்கு இறையருளால் எழுந்தது. "நமிநந்தியே! உன்னுடைய மனக்கவலை ஒழிக; அருகிலுள்ள குளத்துநீரினை முகந்துகொண்டு வந்து இடையருது திருவிளக்கு ஏற்றுக" என்று விசும்பில் ஒரு வாக்குக் கேட்டது. இதனைக்கேட்டு மனம் மகிழ்ந்தார். திருவருளை வியந்தார். அருகிலுள்ள திருக்குளத்தில் இறங்கி நீரை முகந்துகொண்டு வந்து அகலிலே வார்த்து விளக்கேற்றினர். என்னே வியப்பு! அவ்விளக்குச் சுடர்விட்டு எரிந்தது. அதனைக் கண்ட நமிநந்தியடிகள் அரநெறியப்பர் திருக்கோயில் முழுதும் திருவிளக்கு ஏற்றி நீரை வார்த்து எரித்தனர். விடியுமளவும் திருவிளக்கு எரித்தார். நீரால் திருவிளக்கு இட்டதை நாடறியச் செய்தார். இவரைத் திருநாவுக்கரசர் தமது திருவாக்கால் "தொண்டர் ஆணிப்பொன்" என்றும், "நம்பிநந்தி, நீரால் திருவிளக்கிட்டமை நீணுடு அறியுமன்றே" என்றும் ஒரு பாட்டில் அழகாகப் புகழ்ந்துள்ளார்.

கணம் புல்லர் :— இவர் வடவெள்ளாற்றின் தென்கரையில் உள்ள இருக்கு வேளுர் என்னும் பதியில் வாழ்ந்து வந்தார். இவர் "ஈசர் கழலே மெய்ப்பொருள்" என்று கொண்டார். மேலும் சிவபெருமான் திருக்கோயிலில் திருவிளக்கு நாடோறும்

எரிப்பதனையே தாம் பெற்ற செல்வத்தின் பயன் எனக்கருதிச் செய்து வந்தார். இங்ஙனம் சிவத்தொண்டு புரிகையில் இவருக்குச் செல்வம் குறைந்து வறுமை வந்தடைந்தது. அதனால் இவர் தில்லை சென்று அங்குத் தங்கினார். தம் வீட்டிலுள்ள பொருளையெல்லாம் விற்றுத் 'திருப்புலீச்சரம்' என்னும் திருக்கோயிலில் திருவிளக்கு எரிக்கும் பணியினைச் செய்து வந்தார். பின்னர் கணம்புல்லினை அரிந்து கொண்டு வந்து விற்று அதனால் வரும் பொருளைக் கொண்டு திருவிளக்கு எரித்தார். ஒருநாள் இவர் விற்கும் கணம்புல் விலையாகவில்லை. ஆகவே அப்புல்லினையே கொண்டு வந்து தீ மூட்டி அழகிய விளக்காக எரித்தார். முதல் யாமம் வரையில், புல் விளக்கு எரிக்கப் போதவில்லை. பின்னர் தமது திருமுடியினையே அன்பினால் தீ மூட்டி விளக்காக எரித்தார். இது கண்ட சிவபெருமான் இவருக்குப் பெருங்கருணையினைப் புரிந்தருளினார்.

கலிய நாயனார்:- இவர் திருவொற்றியூரில் செக்கார் குலத்தில் அவதரித்தார். இவர் திருவொற்றியூர் திருக்கோயிலின் உள்ளும் புறமும் இரவும் பகலும் திருவிளக்கு எரிக்கின்ற பணியில் சிறந்து விளங்கினார். நீண்ட நாட்கள் இப்பணியினைச் செய்து வந்தார். இறைவர் இவரைச் சோதிக்க எண்ணினார். இவரது செல்வம் இறைவன் அருளால் அழிந்தது. அழிந்த பின்னும் தமது தொண்டினை அவர் கூலி வேலை செய்தும் நடத்தி வந்தார். எண்ணெய் விற்றும், இன்னும், பல கூலிவேலை செய்தும் திருவிளக்கினை எரித்து வந்தார். கூலிவேலையால் வரும் வருவாய் முட்டுப்பாடுற்றது. பின்னர் தமது வீட்டினை விற்று விளக்கெரித்து வந்தார். அப்பொருளும் தீர்ந்தது. இறுதியில் தமது மனைவியாரை விற்றுப் பொருள் பெற்று அதனால் பணிபுரிவதற்கு எண்ணினார். மனமகிழ்ச்சியோடு மனைவியாரை அழைத்துச் சென்று திருவொற்றியூர் முழுவதும் விலை கூறினார். பொருள் கொடுப்பாரைக் காணாது தளர்வெய்தினார். பின்னர், திருக்கோயிலை அடைந்து திருவிளக்கேற்றும் சமயத்தில் "திருவிளக்குப்பணி நின்றுவிடுமாயின் யான் இறப்பதே தகுதி" என்ற துணிவினைக் கொண்டார். திருவிளக்குகளுக்கு எல்லாம் திரியினை இட்டார். அகல்களைப் பரப்பிவைத்தார்;

அதில் எண்ணெய்க்குப் பதிலாக தம்உடலில் நிறைந்த இரத்தத்தைக்கொண்டு நிறைக்க எண்ணிக் கருவிகொண்டு தமது கழுத்தினை அரிந்தார். அப்போது சிவபெருமான் வெளிப்பட்டு, அரியும் கையினைப் பிடித்தருளிக் கலய நாயனருக்குக் காட்சி தந்தருளினர்.

இவ்வாறு நமிநந்தியடிகள், கணம்புல்லர், கலியநாயனர் ஆகிய மூவரும் திருவிளக்கு எரித்தலையே தமது அருந்திருத் தொண்டாகக் கொண்டார்கள் என்பதைப் பெரிய புராணத்தால் நாம் நன்கு அறியலாம். அடுக்கடுக்காய் இவர் மாட்டுத் துன்பம் வந்துற்றகாலையிலும் தமது நிலையில் நின்று கலங்கப் பெருத மாட்சியை என்னென்று புகழ்வது!

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

கவிஞர்கள் கண்ட கந்தன்

திரு. L. சங்கரகுத்தாலம் அவர்கள்
பாபநாசம் (தஞ்சாவூர் ஜில்லா.)

விரிந்து பரந்து மூன்று முறை கடல் கோளால் அழிக்கப்பட்ட தண்டமிழ் நாட்டின் முப்பெரும் பிரிவுகளில் ஒன்ருன தென்புலம் என்ற பாண்டிய நாடு கடல் கோளுக்கு முன்பும் முதற்சங்க காலத்திலும் வடபெண்ணை யாற்றிற்கும் பஃறுளி யாற்றிற்கும் நடுவே இருந்தது. பின்னர் இடைச் சங்க காலத்திலும், கடைச் சங்க காலத்திலும், அதாவது முதல் கடல் கோளுக்குப் பின் வேங்கட மலைக்கும் குமரியாற்றிற்கும் இடைப் பட்டதாயிருந்தது. பின் அடுத்து ஏற்பட்ட கடல் கோளுக்குப் பின் தெற்கு எல்லையாகக் குமரி முனையும் வடக்கு எல்லையாக வேங்கடமும் இருந்தன. ஆகவே இரண்டு கடல் கோள்களாலும் பாண்டிய நாட்டின் எல்லையான பஃறுளியாறும், குமரியாறும் அழிக்கப்பட்டுவிட்டன. கடல் கோளுக்கு முன் பாண்டிய நாட்டின் பரப்பானது குமரி யாற்றிற்கும், பஃறுளி யாற்றிற்கும் இடையில் 700 காததூரம் எனச் சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியக்கிடக்கிறது.

முதற் சங்கத்தின் முதல்வராகச் சிவபெருமானும், முருகனும் இருந்துள்ளார்கள் என இறையனுர் அகப்பொருளிலிருந்து தெரிய வருகிறது. முதற் சங்கத்தின் முதல்வராய் இருந்தவரும் எப்பொழுதும் இளமையாயிருக்கிறபடியால் குமரன் எனவும், அன்பர்களின் உள்ளக் குகையில் குடியிருப்பதால் குகன் எனவும், அழகின் உறைவிடமாயிருப்பதால் முருகன் எனவும், புள்ளி மயில் வாகனத்தை உடையவனுதலால் விசாகன் எனவும், கார்த்திகைப் பெண்டிரால் வளர்க்கப்பட்டமையின் கார்த்திகேயன் எனவும் கங்கையால் தாங்கப்பட்டமையின் காங்கேயன் எனவும், அங்கயற் கண்ணியால் அன்பொழுக எடுத்து ஒன்று சேர்த்து ஒருருவு ஆக்கப்பட்டமையால் கந்தன் எனவும் பல

பெயர்கொண்ட கலியுகவரதனைக் கண்டு, களித்து, பருகி, மெய் யரும்பி, விதிர் விதிர்த்துக் கைகுவித்துச் சூட்டிய பாமாலைகள் பற்பல. கண்டவர்கள் பலராயினும், கண்ட காலம் வேறுபட்ட தாயினும், சூட்டிய பாமாலைகளின் இதழ்கள், அவைகளின் மணம் இவைகளில் எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லை.

நக்கீரர் கண்டார் திருமுருகாற்றுப் படையில். அருணகிரி நாதர் வருணித்தார் அனுபூதியில். குமரகுருபரர் பருகினர் கலிவெண்பாவில். பலரும் பருகினர் முருகனின் அழகினை. கண்டது என்ன!

"…. …. …. …. … …
உருள்பூந்தண்தார் புரளும் மார்பினன்"

தேரினது சக்கரத்தைப் போல் செய்யப்பட்ட உருண்டை யான பூமாலைகள் அசைந்து கொண்டிருக்கும் மார்பினன் என்று நக்கீரர் பார்த்தார். ஆம் அது எத்தன்மை வாய்ந்த பூ! அதன் பெயர் என்ன!!

"… … … … ….கொந்தவிழ்ந்த
வேரிக்கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த"

கடப்ப மலர்மாலை. அவன் பெயர் கடம்பன் ஆயிற்றே. அப்பூக்கள் கொத்துக் கொத்தாக இருந்தனவாம். அதுமட்டு மல்ல தேன் சொட்டிக் கொண்டே இருந்தனவாம். இவ்வாறு கண்டார் அடிகள் குமரகுருபரர்.

மார்பில் மட்டும் தான் மாலையைக் கண்டனரா! இல்லை இல்லை திருமுடியிலும் கண்டனர். என்ன அது காந்தள் பூக்க ளாகிய மாலை! வெறும் மாலை தானு! ஒளி வீசிய, வண்டுகளால் மொய்க்கப்படாதது. இப்படிப்பட்ட பூக்கள் எங்கே மலர்ந் திருந்தன. குரங்குகள் கூட ஏறி அறியாதபடி அவ்வளவு அடர்ந்த மரங்களுடைய சோலையில். அம்மட்டோ! அங்கே கிண்கிணி சூழ்ந்த சிறிய பாதங்கள் உடைய தெய்வப் பெண் கள் கூடப்பாடி ஆடினராம், இதைச்,

"சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூர்அரமகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துக்
கரும்புந் முசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெரும்தண் கண்ணி மிலைந்த சென்னியன்"

இவ்வாறு கண்டார் நக்கீரர்.

தலையில் காந்தள் பூக்கள் மாலையை மட்டும் தானு கண்டார்கள்? அல்லவே கிரீடத்தையும் சேர்த்தல்லவா கண்டனர். எவ்வாறு? இதோ,

"... ... .மின்னுருவம்
தோய்ந்த நவரத்னச் சுடர்மணியால் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்"

இவ்வாறு கண்டார் குமரகுருபரர். இதையே

ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பின் சென்னிப் பொறப்ப

எனக் கண்டார் நக்கீரர்.

பாடல்களில் சொற்கள், சீர்கள் இவைகள் மாறுபட்டதாயினும், கண்ட காலம் கி. பி. 17-ம் நூற்ருண்டும், கி. பி. 1-ம் நூற்ருண்டும் எனக் காலத்தினுல் வேறுபட்டதாயினும் கண்ட காட்சி ஒன்று; பொருள் ஒன்று. முதல்வர் சொன்ஞர் நவரத்தினங்களாலும் பசும்பொன்னுலும் செய்யப்பட்டது என்று. இரண்டாமவர் சொன்ஞர் வெவ்வேறு நிறங்களோடு விளங்குகின்ற அழகிய மணிகள் என்று, முன்னவர் சொன்ஞர் மின்னல் போல் ஒளிவிடுகின்ற கிரீடம் என்று. பின்னவர் சொன்ஞர் மின்னலைப் போல் ஒளிவிட்டு முருகனது சிரசை அழகுபடுத்தியதென்று.

அழகை அள்ளிப் பருகிய அன்பர்கள் உள்ளம் அண்ணலின் உள்ளத்திலும் அருளிலும் வேற்றுமையா கண்டனர்? இதோ,

"மகமாயை களைந்திட வல்லபிரான்
முகம் ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே
அகம்மாடை மடந்தையர் என்று அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே"

என்று அருணகிரியாரும்.

"... ... ...பெருகியெழு
முன்றவத்தையும் கழற்றி முத்தருடனே இருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்து"

என்று குமரகுருபரரும் கண்டனர்.

மாயையின் பரம்பரையை ஒழித்தவன் ஞானபண்டிதன். சூரபன்மனின் தாயார் சுரசையாவாள். அவளின் பிறிதொரு பெயர் மாயையாகும். அவளின் திறங்கள் அனைத்தையுங் கண்ட அவுணர்களின் குரு சுக்கிராச்சாரியார் அவளுக்கு மாயை எனப் பெயரிட்டார். ஐம்முகச் செக்கச் செம்மேனி யனுல்கூட தனக்கு அழிவு வரக்கூடாதென்று வரம்பெற்ற மாயையின் மக்களான சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் இன்னும்பல் கோடி மாற்று உருக் கொண்டவர்களையும் அவர் களின் இனங்களையும் வேருடன் அறுத்தெறிந்த அண்ணல் ஆறுமுகம் அல்லவா! அப்படியிருக்க மாயையின் பரம்பரையை ஒழித்தவன் என்பதில் சந்தேகம் உண்டா!

ஆனுல் அருணகிரிநாதரோ மாயையின் பரம்பரையை மட்டும் தானு மாய்க்க வல்லவன் அவன், மானிடர்களின் "மக மாயை களைந்திட" என்று சுத்தமாயை அசுத்தமாயை பிர கிருதிமாயை ஆகிய பெரிய மாயைகளைக் களைந்திடக் கூடியவன் என்றல்லவா கூறினுர். அம்மட்டோ

"அகம்மாடை மடந்தையர் என்று அயரும்
சகமாயையுள்"

என்றும் வீடு, பொன், பெண் ஆகிய உலக மாயங்களிலிருந்தும் காப்பவன் கருணைக் கடல் கடம்பன் என்றுமல்லவா சேர்த்துச் சொன்னுர்.

(தொடர்ச்சி 324-ம் பக்கம் பார்க்க)

சிந்தனை

திரு. க. சுப்பிரமணியன் அவர்கள்
ஆத்தூர்.

சிந்தித்து வாழ்வது மனித வாழ்க்கை. சிந்தனையில்லார் வாழ்வு சிறப்புற அமைவது அரிது. செயலுக்கு முதற்காரண மாய்-அடிப்படையாய் விளங்கும் சிந்தனைத் திறனைப் பெறுவது எப்படி? விலங்குகளின் செய்தொழிலுக்கும் மனிதனின் செய் தொழிலுக்கும் மகத்தான வேறுபாடுகள் உண்டு.

மனிதனுக்குப் பிறப்பிலே சிந்திக்கும் ஆற்றல் இருப்ப தில்லை. சுற்றுப்புறங்களின்மூலம் ஓரளவு உலகியலை உணர்ந்து கற்கவேண்டிய நூல்களைக் கற்றுக் கற்க இயலாதவிடத்துக் கேள்வி ஞானம் பெற்றுத் தன்னுடைய அறிவு என்னும் சுனை யில் சிந்தனை என்னும் வற்ரு நீர் ஊற்றை ஏற்படுத்துகிருன். சிந்தனையின் விரிவால்-பெருக்கால் அறிவு விளக்க முற்றுப் பகுத்து அறியும் தன்மையை அடைகிறது.

மனித உயிர் அல்லாத பிற உயிர்கட்கு இறைவன் பகுத் தறிவைக் கொடுக்கவில்லை. சிந்தனையற்ற அவ்வுயிர்களின் வாழ்வில் பகுத்தறிவிற்கு இடமில்லாது போகவே, அவைகளின் வாழ்வு தாழ்வுற்றுக் காணப்படுகிறது.

பெறுதற்கரிய இம்மானுடப் பிறவியைப் பெற்றிருந்தும், பிறப்பின்பயன் உணராது அல்லவையே செய்து, மீண்டும் பிறவி யெடுத்து அல்லற்பட வேண்டிய அவலநிலை நோக்கிப் பயணம் செய்கின்ற மக்கள் எத்தனை பேர்! அறிவுடைமையால் அன்ருே மானுடப்பிறவி பெறுதற்கரியது என ஆயிற்று. ஏனைய உயிர் கட்குக் கொடுக்காத ஒன்றை இறைவன் நமக்குக் கொடுத்

துள்ளான். அந்த அறிவின் பயனுல் அவனே-எல்லாம் வல்ல இறைவனே உணர வேண்டும். உணர்ந்து உய்யும் நெறி தேடி ஒழுகவேண்டும். உணர்தல், தேடுதல் இவை சிந்தனேயின் துணேகொண்டு அறிவுத் தாயிடமிருந்து தோன்றுபவை.

"கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅர் எனின்."

என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு.

சிந்தனேயை வளர்க்கும் கல்வி செவ்விய முறையில் அமைதல் வேண்டும். சிந்தித்து வாழ்ந்து சிறப்படைய வேண்டிய மனித வாழ்க்கையின் அமைப்புக்கு அடிகோலுவது கல்வி. 'விளேயும் பயிர் முளேயிலே தெரியும்' என்பது போலச் சிந்தனேயின் பயன் கல்வியின் அமைப்பால் விளங்கும்.

மக்களுட் சிலர் நற்செயல் புரிபவராயும், சிலர் தீயசெயலே யாண்டும் செய்து வருபவராயும் காணப்படுகின்றனர். இரு சாரரும் சிந்தித்தே செயல் படுகின்றனர். ஆனுல் அவர்களின் சிந்தனே செல்லும் மார்க்கம் வேருன தாய்முன்னவர் நல்லவனென்றும், பின்னவர் தீயோன் என்றும் அழைக்கப்படுகின்றனர். இது அவர்கள் கற்ற கல்வியின் வேறுபாடேயொழிய வேறல்ல. எனவேதான்,

"கிழியும் படியடற் குன்றெறிந்
தோன்கவி கேட்டுருகி
இழியும் கவிகற் றிடாதிருப்
பீர்!"

என்று அருணகிரிநாதர் நம்மை எச்சரிக்கிருர்.

"இழிந்த நூலேத்தான் கற்பேன். இழிந்த செயலேத்தான் செய்வேன்; நட்பில் வஞ்சகம் புரிவேன்; பிறன் மனேயாளேக் கெடுப்பேன்; கன்னிப்பெண்களுக்குத் தீயனபுரிவேன்; புலால் உண்பேன்; நம்பி இருப்பவர்களேச் சமயம் நோக்கிக் கவிழ்த்துச் சதிபுரிவேன்;" என்று தீய சிந்தனேயுடைய ஒருவன் கூறுவானுயின் அவனுக்கு என்ன தண்டனே கிடைக்கும் என்பதையும் அருணகிரியார் கூறுகிருர் அழகு தமிழில்,

"........"எரிவாய் நரகக்
குழியும் துயரும் விடாய்ப்படக்
கூற்றுவன் ஊர்க்குச் செல்லும்
வழியும் துயரும் பகரீர்;
பகரீர் மறந்தவர்க்கே."

இம்மையில் என்ன துன்பம் அடைவான் என்பதைப் பாருங்கள்.

"நட்பிடைக் குய்யம் வைத்தான் பிறர்மனை
நலத்தைச் சேர்ந்தான்
கட்டழல் காமத் தீயால் கன்னியைக்
கலக்கி னுனும்
அட்டுஉயிர் உடலம் தின்றுன், அமைச்சனுய்
அரசு கொன்றுன்
குட்டநோய் நரகந் தன்னுள் குளிப்பவர்
இவர்கள் கண்டாய்."

என்பது சிந்தாமணி. சிறந்த நூல்களைக் கற்றுச் சிந்தனையை நல்ல முறையில் வளர்க்கத் தவறுகிறவனுக்குக் கிடைக்கும் பரிசு மீளா நரக வேதனை!.

எனவேதான் தொல்காப்பியர் மக்களுள்ளும் மிருக இனத்தவர் வாழ்கின்றுர்கள் எனக் கூறியுள்ளார். தன் இனத்தோடு காட்டிலே வாழவேண்டிய இவர்கள் நாட்டிலே, வீட்டிலே வாழ்ந்து நல்லவனையும் தீயவனுக்கித் தம் இனப் பெருக்கத்திற்குப் பெரிதும் பாடுபடுகிறுர்கள். சமுதாயத்தில் மறைந்து வாழும் இம்மிருக இனத்தைக் கண்டு நாம் அஞ்சி ஒதுங்க வேண்டும். ஏன்? ஆன்ம பலம் பொருந்திய மணிவாசகப் பெருமானே அஞ்சி ஓடுகிறுரே.!

"தறிசெறி களிறும் அஞ்சேன் தழல்விழி
உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன் விண்ணவர்
நண்ண மாட்டாச்

சேறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி
திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சு மாறே"

என்பது தேனினுமினிய திருவாசகம்.

மனிதனைத் தெய்வத் தன்மை யுடையவனுக்க வல்லது நற் சிந்தனை. சிந்தித்துச் செயலாற்றிய பெரியோர்கள் இன்று அறுபான்மும்மை அடியார்களாய் நம் உள்ளத்தில் கொலு விற்றிருக்கிறுர்கள். "சிந்தனை நின் தனக்காக்கி" என்னும் திருவாசகத்திற்குப் பொருளாய் நின்று பெருமையுற்றவர்கள் பெரிய புராணத்தில் பேசப்படும் அடியார்கள். அவர்கள் காட்டிய முறையைப் பின்பற்றுதல் நம் வாழ்விற்கு நாம் வகுத்துக் கொண்ட நல்வழி-அதுவே அறவழி-இறைவனை அடையும் எளிய வழி.

(முன் 320-ம் பக்கத் தொடர்ச்சி)

அதையே குமரகுருபரர் "மூன்றவத்தையும் கழற்றி" எனக் கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்றவத்தைகளின் இன்னல் களை ஒழிப்பவன் என்று பாடியருளினுர்.

மந்திரமே இரத்தம், பதமேமாமுடி, வண்ணமே தோல், புவனமே மயிர், தத்துவமே ஏழுதாதுக்கள், கலையே அவயவங்கள் என ஆறு அத்துவா வடிவாகக் காட்சி யளிக்கும் கருணைக் கடல், காடுகிழாளின் புதல்வன், கார்த்திகை மைந்தன், கச்சைத் திரு அரையன், செங்கையன், சீரடியன் நமக்கேற்படும் எல்லா இன்னல்களிலிருந்தும் நம்மைக் காப்பானுக.

திருச்சிற்றம்பலக் கோவையாரில் சித்தாந்த சைவம்

சைவப்புலவர், பண்டித,
திரு. அ. சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
சமயச்சொற்பொழிவாளர், நாகர்கோயில்.

திருச்சிற்றம்பலக் கோவை என்னும் நூல் மாணிக்க வாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட செந்தமிழ்ப் பெரு நூலாகும். கோவை என்பது தொண்ணூற்றுறு பிரபந்தங்களில் ஒன்று. கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் ஆக்கப்பட்ட இந்நூல் 400 பாடல்களையுடையது. திருக்கோவையார் என்பது தில்லையில் எழுந்தருளிய சிவபெருமான் மீது பாடப்பட்ட ஒரு சிறந்த நூலாகும்; இதனை எட்டாம் திருமுறை வரிசையில் திருவாசகத்தோடு சேர்த்துக் கூறுவாரும் உளர். இந்நூலைப்பற்றி,

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

என்று பிற்காலத்தான்றேர் ஒருவர் கூறியுள்ளார்.

மெய்த்தவ வாதவூரடிகள் விளம்பத் திருவாசகத்தை எழுதிய எம்பெருமான் அன்பரை நோக்கித் தில்லையம்பலவரைத் தலைவராய்க் கொண்டு திருச்சிற்றம்பலக் கோவை பாடுக என்று பணிக்க அவரும் அன்பினுல் உருகிக் கண்ணீர் வார மயிர் சிலிர்க்க யான்பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்பதற்கொப்பத் தாம் அனுபவித்த இறையருள் இன்ப நலங்களை உலக மக்களும் பெறவேண்டுமென்ற பேரருளினுல் பாடினுர். இது அகப்பொருள் இலக்கணங்களைத் தன்னகத்தே கொண்டும் சித்தாந்த சைவத்திறத்தினை இலை மறைகாய்போல் கொண்டும் மிளிர்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்நூலில் கூறும் கருத்தினைப் பார்ப்போம். மாணிக்கவாசகப் பெருமான் தன்னைவலிய ஆட்கொண்ட பெருமானைக் "கல்லைப்பிசைந்து கனியாக்கித்தன் கருணைவெள்ளத்து அழுத்தி வினைகடிந்தான்" (திருவம்மானை) என்றும் "கல்லைமென் கனியாக்கும் விச்சைகொண்டென்னை நின்கழற்கு அன்பனுக்கினாய்" (திருச்சதகம் ஆனந்தாதீதம்) என்றும், "கன்னாருரித்து என்னை யாண்டுகொண்டான்" (திருப்பூவல்லி) என்றும் திருவாசகத்தில் கூறியுள்ளார்.

இவ்வாறு என்னை அடிமை கொள்வதற்கு முன்னால் வலியனவற்றை வசமாக்கிப் பயின்ற பிறகுதான் என் கல்போன்ற மனத்தையும் வயமாக்க முடிந்தது என்கிறார். இதனைத் திருச்சிற்றம்பலக் கோவையாரில் "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டு என்னை யாண்டுகொண்ட செவ்வரை மேனியன்" என்று கூறுகின்றார்.

இனி, கோவையிலுள்ள சித்தாந்தக் கருத்துக்களைப் பார்ப்போம். ஐந்தொழில் புரியும் அவ்விறைவன் சக்திக்குக் கணவனாகவும், தந்தையாகவும், மகனாகவும், இருக்கிறான் என்ற சித்தாந்தக் கருத்தையும் தெரிவிக்கின்றது. இதனை,

தவளத்த நீறணி யுந்தடந் தோள்அண் ணல்தன்னொருபால்
அவளத்த னும்மக னுந்தில் லையான்அன் றுரித்தன்ன
கவளத்த யானை கடிந்தார் கரத்தகண் ணார்தழையுந்
துவளத் தருவன வோசுரும் பார்குழற் றூமொழியே.

என்று கூறியுள்ளார்.

இச்செய்யுளில் வெண்மையான நீறணியும் அண்ணல் உடலில் தன்னொரு பாகத்தில் சத்தியை உடையவராக இருக்கிறார். உலகத்தைப் படைத்தற் பொருட்டு இறைவன் சத்தியும், சிவமும் ஆனபோது கணவனென்றும் அவள் அத்தனும் (தந்தையாம்) என்பதற்கு சிவதத்துவத்தினின்றும், சத்தி தத்துவம் தோன்றுவதினால் சத்திக்குத்தந்தையென்றும், மகனும் என்பதற்குச் சத்திதத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றுவதினால் சத்திக்கு மகனென்றும் பொருள் படுகிறது.

ஆகவே தில்லையான் கணவன், தந்தை, மகன் என்ற மூன்று முறைகளில் அமைந்திருப்பது உணரத்தக்கது.

இக்கருத்தையொட்டித் திருவாசகம் திருப்பொற் சுண்ணத்தில்

"என்னுடை ஆரமு(து) எங்கள்அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே".

என்று பாடியிருக்கிறார். இதில் கூடுதலாகத் தமையன் என்ற ஒருமுறை கூறப்பட்டிருக்கிறது. இதை ஆராய்ந்தால் சுத்த மாயையிலிருந்து இறைவனுடைய ஞானசக்தி அதிட்டிக்க சிவதத்துவமும், கிரியாசத்தி அதிட்டிக்க சத்தி தத்துவமும் தோன்றுவதினால் சத்திக்குத் தமையன் என்பது தெளிவாகிறது. ஆகவே திருக்கோவையாரும், திருவாசகமும் ஒருங்கே சித்தாந்தக்கருத்தினைத் தெளிவாக உணர்த்துவதை அறிந்து கொள்ளலாம். இதனைச் சிவஞான சித்தியார்,

சிவம்சத்தி தன்னையீன்றும் சத்திதான் சிவத்தையீன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும்

என்றபாடலாலும்,

"தரும் வடிவானவெல்லாம் சத்தியுஞ் சிவமுமாகுஞ்
சத்திதான் சத்தனுக்கோர் சத்தியாஞ் சத்தன்வேண்டிற்
றெல்லாம் சத்திதானே."

என்ற பாடலாலும் அறிந்து கொள்ளலாம்.

ஆகவே சாத்திரக் கருத்தும் முற்கூறிய தோத்திரக் கருத்தும் இங்கு அறிந்து இன்புறத் தக்கது. இத்தகைய கருத்துக்கள் சிந்திப்பவர்க்குச் சிறந்த செந்தேனை முந்திப் பொழிவன வன்றியும் முத்தியும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

திருக்கோயில் திருநாட்கள்

திரு. ஆ. முத்துக்குமாரசாமிபிள்ளை அவர்கள்
ஆதீன சைவப்பிரசாரகர், அம்பாசமுத்திரம்.

திருக்கோயில்களில் திருநாட்கள் சிறப்பாக நடைபெற வேண்டும். ஏன் எனின்? நித்தியத்தில் தாழ்வு தீரச்செய்வது சிறப்புத் திருநாட்கள். திருவள்ளுவரும் சிறப்புத் திருநாட்களை விரும்புகிறார். அதனால்

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. என்றார்.

சிறப்புத்திருநாட்களில், யாகசாலையும், ஆகம முறைப் படி பூசைகளும் முறையாகத் தவறாது நடைபெறும்படி செய்ய வேண்டும். பூசைக்கு வேண்டிய சாமான்கள் குறையின்றிக் கொடுத்தல் வேண்டும். திருநாட்களில் பூசைக்குக் கொடுக்கப் படும் சாமான்கள்தான் மிகவும் குறைந்ததாக இருக்கும். அதற்குரிய பணியாளர்கள் குறைவில்லாது சாமான்களைப் பெற்று, பூசைக்காரியங்களை மக்கள் மனத்தைக் கவரும் முறையிலும், பத்திஉண்டாகும் முறையிலும் செய்துகாட்டல் வேண்டும். அவர்கள் பத்தி ஆர்வத்துடன் நடந்து காட்ட வேண்டும்.

இறைவன் விரும்புவது "பூசனை" யென்பதை எல்லோரும் உணரும்படி செய்ய வேண்டியது திருக்கோயிலில் உள்ள ஆதி சைவர்கள் கடமையாகும்.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம்விரும்பும்
உண்மையாவது பூசனை எனவுரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனைபுரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து."

இறைவன் விரும்புவது பூசனையேயாகும். சிறப்புவரப் போய், உள்ளதும் போய்விடுகிறது. காலங்கள் நின்று விடுகின்றன. இத்தகைய தவறுகள் நீங்க வேண்டும்.

வழிபாடு :–

திருக்கோயில்களில் வழிபாடுகள் முறையாக நடைபெற வேண்டும். அர்ச்சனைகளும் ஒழுங்காக நடைபெற வேண்டும். மந்திரங்கள் பூருவும் ஓதவும்வேண்டும். அர்ச்சனைச் சீட்டுகள் வாங்கிய எண்களின் முறையில் வழிபாடு இயற்றினுல் ஆண்டவன் சந்நிதியில் வழிபாடுகள் அமைதியாக நடைபெறும். இதைக் கோயில் நிர்வாக அதிகாரிகள் தங்கள் பணியாளர்கள் மூலம் நிறைவேற்றலாம். சைவ, வைணவ ஆலயங்களில், வழிபாடுகள் முறையாகவும், அமைதியாகவும், மக்களில் உயர்வு, தாழ்வு கருதாதும் நடைபெற்ருல் நல்லது. அன்பர்களும், அடியார்களும், பக்தர்களும், வழி பாட்டில் அல்லல் உற, மனம் நோக, மற்றவர்கள் இறைவன் சந்நிதியில் பெருமையைக் காட்டுவதும், பெருமையை அடைவதும் நேர்மை ஆகாது. இறைவன் சந்நிதியில் யாவரும் சமம் என்பதை அதிகாரிகளும், செல்வந்தர்களும், செல்வாக்கு உடையவர்களும் நடந்து காட்ட வேண்டும். அன்பர்களும், பக்தர்களும் திருக்கோயில் வழிபாட்டில் அமைதியாக, ஒழுங்காக, முறையாக நின்று வழிபட வேண்டும். திருக்கோயில்களில் திருநாட்களில், மண்டபங்களில் ஒலிபெருக்குங் கருவியை வைத்து, மக்கள் உள்ளே செல்ல வேண்டிய முறையையும், வழிபட வேண்டிய முறையையும் விளம்பரப்படுத்த வேண்டும். மக்கள் கேட்பார்கள். அதன்படி நடப்பார்கள். இதை இன்று, அரசியல் கூட்டங்களில் கண்டு வெற்றியும் அடைந்திருக்கிருர்கள். சமய வழிபாட்டில் முழு வெற்றி கிடைக்கும்.

வழிபடும் மக்கள் :

திருக்கோயில்களில் வழிபாடு செய்ய வருகின்றவர்களில் பெரும்பான்மையோர் பக்தர்கள்; பெரியோர்கள் ஆவார்கள். அவர்கள் நியதிக்கும், ஒழுங்குக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள். ஆகையால் திருக்கோயில்களில் கூட்டங்களை ஒழுங்குபடுத்தச்

சாரணர்கள் போதும். மக்களின் பொருள்களைப் பாதுகாக்க வயது நிறைந்த போலீஸார்கள் போதும். திருக்கோயில்களின் பண்பே அறியாத M. F. S. (சென்னை தியணைக்கும் பணியாளர்) தேவையில்லை. திருச்செந்தூர் மாசித் திருவிழாவில் இவர்கள் மக்களிடம் நடந்துகொண்டமுறை மிகவும் வெறுக்கத் தக்கதாயிருந்தது. மக்கள் வருந்தும் முறையில் அவர்கள் நடந்து விட்டார்கள். திருக்கோயில் திருவிழாக்கள் அனுபவம் அவர்களுக்குக் கிடையாததே காரணமாகும்.

அர்ச்சனை :

அரசியலார் வடமொழி அர்ச்சனையும், திருமுறைகள் அர்ச்சனையும் செய்ய அனுமதித்திருக்கிறார்கள். திருக்கோயில்களில் இரண்டுவிதமான அர்ச்சனையும் நடைபெறவழி செய்யவேண்டும். வடமொழி அர்ச்சனை செய்ய "வாத்தியார்" இருக்கிறார். திருமுறை அர்ச்சனை செய்ய ஓதுவார்கள் இருக்க வேண்டும். அவர், விநாயகர் அகவல், போற்றித் திருத்தாண்டகம், சிவபுராணம் கீர்த்தித் திருஅகவல், திருமுருகாற்றுப்படை இவைகளைப்படித்து ஓதவேண்டும். தமிழ் அர்ச்சனையைப் பற்றிப், பலவருடங்களாக, மறைமலை அடிகளார், திரு. வி. க; சி. ராமச்சந்திரன் செட்டியார், குன்றக்குடி அடிகளார், ஆகிய பெரியோர்கள் கொண்ட கருத்தை மக்கள் கருத்தில் கொண்டு வழிபாட்டில் நடந்து காட்ட வேண்டும். ஆர்வமும், செய்கையுந்தான் நலம் விளைவிக்கும்.

திருநாட்களில் திருக்கோயில்களில் பூசை, வழிபாடு, முறையாக நடந்து விட்டால், மற்றக்காலங்களில் சரியாக நடைபெறத் தொடங்கிவிடும். மக்களும் திருக்கோயில்களின் நன்மையையும், திருவிழாக்களின் பெருமையையும் உணர்ந்து நடப்பார்கள். கல்வியின் பயன் கடவுளைத் தொழுதலாகும்.

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்."

—

பாட்டியல்

மதுரகவி மரபினர்,
திரு. T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர் அவர்கள்,
மெயின்ரோடு, வாளாடி P. O. திருச்சிராப்பள்ளி.

[மலர் 13. இதழ் 4-ன் தொடர்ச்சி]

உண்டிப்பொருத்தம். 2

நாட்பொருத்தத்தில் ஆய்ந்தெடுத்த எழுத்துக்களைக் கொண்டே உண்டிப்பொருத்தம் அமைக்க வேண்டியிருத்தலான் இரண்டாவதாக உண்டிப்பொருத்தம் கூறப்புகுந்தேம்.

அமுதென விடமென வருமிரு வகையும்
உணவெனப் புலவர் உரைத்தனர் உளரே. -பன்னிருபாட்டியல்

(இ. பொ.) எழுத்துக்களுள் அமுத எழுத்துக்கள் என்றும், விட எழுத்துக்கள் என்றும், வரும் இருவகையையும் உண்டிப் பொருத்தம் என உரைத்த புலவர் உளர் என்பதாம்.

உண்டி, உணு, உணவு என்பன ஒரு பொருட்சொற்கள்.

உண்டியானது அமுதம், நஞ்சு, என இருவகைப் படுமாறு போல இவ்வெழுத்துக்களும் நன்மை தீமைகளைப் பயக்கும் ஆற்றல் வாய்ந்ததாகலான் உண்டியென்றார்.

அவ்விருவகை எழுத்துக்களில் அமுத எழுத்தாவது;

(அமுத எழுத்துக்கள்)

உயிர்க்குறில் நான்கொடு க ச த ப நமவ
மயக்கற அமுத எழுத்தாகும் என்ப, -பன்னிருபாட்டியல்

(இ. பொ.) உயிரும் உடம்புமாகிய முதலெழுத்துக்களுள் அ. இ. உ. எ. என்னும் உயிர்க்குறில் நான்கும், க். ச். த். ப். ந். ம். வ் என்னும் மெய்யெழுத்துக்கள் ஏழும் ஆகிய பதினொன்றும் மயக்கமில்லாத அமுத எழுத்தாம்.

'ஆகும்' என்பது பாட்டுடைத்தலைவன் மீது பாடும் பாவின் முன்னெழுத்தாக அமைக்க உரியதாகும் எனப் பொருள்படும்.

இவ்வுயிர் மெய்யோ டியைந்தன கொளலே. -பன்னிருபாட்டியல்

(இ. பொ.) அமுதமெனச் சொல்லிய அ. இ. உ. எ. என்னும் நான்கு உயிர்க்குறிலோடு இயைந்த மெய்களும், க். ச். த். ப். ந். ம். வ். என்னும் ஏழுமெய்யுடன் இயைந்த உயிர்களும், அமுத எழுத்தாம் எனக்கொள்க.

உதாரணம் :- ச்+ஒ=சொ. ஈண்டுச்சகர மெய்யாகிய அமுத எழுத்தில் அமுத எழுத்தல்லாததும், விலங்கின் கதிக்கு உரியது மாகிய ஒகரம் ஏறத்தோன்றிய 'சொ' என்னும் உயிர் மெய் அமுத எழுத்தாயிற்று.

ஞ்+எ=ஞெ. ஈண்டு அமுத ஒற்றல்லாத ஞகரமெய்யின் மீது அமுத உயிராகிய எகரம் ஏறத் தோன்றிய 'ஞெ' என்னும் உயிர்மெய் அமுத எழுத்தாயிற்று.

சொல். ஞெண்டு. என்னும் மங்கலமொழியை நோக்குக.

அமுத ஒற்றுக்களில் உயிரெழுத்துக்கள் சேரப்பிறக்கும் உயிர் மெய்களும், அமுத எழுத்தாம் எனக் கூறும் இந்திரகாளி யார் வாக்கையும் நோக்குக.

மெய்யாம் அமுதின் மேவிய உயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின என்ப. – *இந்திரகாளியார்*

அஃதே போல் ஆதி உயிராகிய அ. இ. உ. எ. என்னும் அமுத எழுத்துக்களுடன் சேர்ந்த மெய்யையும் அமுதெழுத்தென்றார்.

அமுதெழுத் தென்ற ஆதிஉயிர்நான்கொடும்
புணர்ந்த மெய்யை உணர்ந்தமு தென்ப, — *இந்திரகாளியார்*

முதற்பாட்டின் முன்னெழுத்து அமுத எழுத்தாய் விளங்க வேண்டும் என்பதோடமையாது, தசாங்கத்து இறுதி எழுத்தும் அமுத எழுத்தாய் இருத்தல் வேண்டுமென வெண்பாப்பாட்டியல் கூறும். வருமாறு:—

மதித்த கசதநப மவ்வோடு வவ்வும்
உதித்தமைந்த நாற்குற் றுயிரும் – துதித்தமுதென்
ருதி மொழிக்கும் தசாங்கத் தயலுக்கும்
தீதிலவே என்ருர் தெரிந்து. —வெண்பாப்பாட்டியல்

(நச்செழுத்துக்கள்)

ஆஓ இரண்டும் யரல மூன்றும்
தாவிலிவ் விருவகைக் கூட்டத் தியைந்தவும்
அளவும் ஆய்தமும் ஐவகைக் குறுக்கமும்
உளமலி புலவர் உரைத்தனர் நஞ்சென்
றவையொரு பெயர்மருங் கணய நிற்பின்
நவையுறு துஞ்சலும் நடுக்கமுஞ் செய்யும்.—பன்னிருபாட்டியல்

(இதன் பொருள்) ஆ. ஓ. என்னும் நெட்டுயிர் இரண்டும், ய். ர். ல். என்னும் ஒற்றுக்கள் மூன்றும், ஆகிய இவ்விரு வகைக் கூட்டத்து நீங்குதலில்லா தியைந்த எழுத்துக்களும், அளபெடையும், ஆய்தமும், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம் மகரக்குறுக்கம் என்னும் ஐவகைக் குறுக்கமும், நச்செழுத்துக்கள் என்று நிறையுளங் கொண்ட புலவர் நவின்றனர். நச்செழுத்துக்கள் என்று சொல்லப்படும் அவ்வெழுத்துக்களுள் ஒன்று பாட்டுடைத் தலைவன்மீது பாடும் பாவின் முதற்சீரின் முதன்மொழியாகிய பெயரிடத்து முன் நின்றால் பாட்டுடைத் தலைவனுக்கு இழிவு பொருந்திய இறப்பையும், அவன் குடும்பத்திற்கு அச்சத்தையும் உண்டாக்கும்.

இருவகைக் கூட்டத்து இயைந்த எழுத்துக்கள் வருமாறு:-
யா. யோ. ரா. ரோ. லா. லோ.

"இருவகைக் கூட்டத்தியைந்த" என்பதற்கு ஆகார ஓகாரங்கள் கூடிய எல்லா மெய்களும், யரல என்னும் ஒற்றுக்

கள் கூடிய எல்லா உயிர்களும், நஞ்சாம் எனப்பொருள்கொள்ளு வர் சிலர். இங்ஙனம் அவர்கள் பொருள் கொள்ளுவது பொருந்து மாறில்லை.

என்னை யெனின் கார், பார், என்னும் இவ்விரு மங்கலச் சொற்களில் ககர, பகர ஒற்றுக்களின் மீது ஆகாரம் கூடி யிருத்தல் காண்க. இவைகளை நச்செழுத்தென்று கூற இயலுமா? இயலாது.

"மெய்யாம் அமுதின் மேவிய உயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின என்ப".

எனும் இந்திரகாளியச் சூத்திரத்தின் படியும், "இவ்வுயிர்மெய் யோடியைந்தன கொளளலே" என்னும் பன்னிருபாட்டியல் சூத் திரப்படியும், அவ்வெழுத்துக்கள் அமுதமாயின.

ஆகையான் எல்லா மெய்களின் மீதும் ஏறிய ஆகாரத்தை நஞ்செனக் கொள்ளுதல் பொருந்ாது என அறிக. ஓகாரமும் இங்ஙனமேயாம்.

பின் எங்ஙனம் கோடல் அமையுமெனின் விளம்புதும்.

யரல ஒற்றுக்கள்மீது ஏறிய ஆகார ஓகாரங்களே நஞ்சாம் எனக் கொள்க.

வெண்பாப் பாட்டியல் சூத்திரமும் இவ்வாறே இயம்பா நிற்கும். வருமாறு:-

தெரிந்த யரலமேற் சேர்ந்தஆ ஒவும்
புரிந்தவற் றெற்றுய்தப் புள்ளி - விரிந்த
அளவொடுகான் மாத்திரையு மாமென் றறிந்தோர்
உளவென்றுர் நஞ்சென் றெழி. — வெண்பாப்பாட்டியல்

ஒருசாரார் நெட்டுயிர் ஏழும் நச்செழுத்தென்பர். அவர்தம் கூற்றும் பொருந்தாத கூற்றேயாம்.

என்னை யெனின், பாட்டியலார் நெட்டுயிர் ஏழும் நஞ் சென நவிலாமையானும், ஆனை, ஆரணம் என்னும் இவ்விரு சொற்களையும் மங்கலச் சொற்களாக எடுத்தாண்டுள்ளமை

யானும், மேல்வரும் கதிப்பொருத்தத்தின் கண்ணும் ஆ. ஈ. ஊ. ஏ என்னும் நெட்டுயிர்களை மக்கள் கதிக்கு உரிய என மொழிந் திருத்தலினும், நெட்டுயிர் எல்லாம் நஞ்செனக் கூறுவார் தம் கருத்து குற்றமுடைத்தாம்.

ஆனை, ஆரணம் என்னும் மங்கலச் சொற்களின் முன் நெட்டுயிர் நிற்றலை நோக்குக.

நச்செழுத்துக்களைக் கூறப்போந்த பலர் கருத்து வேறு பாடு உற்றிருக்கினும், அமுதஎழுத்துக்களைக் கூறும் ஞான்று ஒத்தகருத்தினராய் உள்ளனர்.

ஈண்டுப் பாட்டியலார் காட்டியவாறு பொருந்தும் நாட் களுக்குரிய எழுத்துக்களில் உள்ள நச்செழுத்தை நீக்கி பாட்டுடைத்தலைவன் மீதுபாடும் பாவில் முன்னெழுத்தை அமுத மாக அமைத்து நலஞ் செய்க.

அடுத்துக் கதிப்பொருத்தம் கூறுவாம்.

(வளரும்)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9324 & 25	தணிகை முருகன் பாமாலைத் திரட்டு	தணிகை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான [வெளியீடு.
9326 to 29	பண்டாரச் சாத்திரம், சித்தாந்த பஃறொடை உரையுடன்	திருவாவடுதுறை ஆதீனம்.
9330 to 33	சிவப்பிரகாசம் - சிர்மைக் கட்டுரை, பொது அதிகாரம், முதற்பகுதி	௸
9334 to 41	துன்பநீக்கம் அருளும் பாராயணத் திருமுறை	தருமபுர ஆதீனம்.
9342	The Journal of the Tanjore Sarasvathi Mahal, Library, vol. XV No. 3	By S. Gopalan, B.A., B.L., Hon. Secretary T. M. S. S. M. Library, Tanjore.
9343	The Madras Agricultural Income Tax-Act 1955 (Madras Act V of 1955) and the Rules made there under	The Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras 1959.
9344	விகாரி வருட பஞ்சாங்கம் 1959	தருமையாதீனம்.
9345	The Journal of the Tanjore Sarasvathi Mahal Library, vol. XIV No. 3	By S. Gopalan, B.A., B.L., Hon. Secretary T. M. S. S. M. Library, Tanjore.
9346	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் முதல் 1008 நூல்களின் பாராட்டு விழா நூல்பட்டி	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1/140 பிராட்வே. சென்னை–1

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை	...	0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்) (புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம்	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ..	...	1 30
7*	திருவாசகம் (அச்சில்)		
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	...	0 56
10*	திருமந்திரம் .. (புதிய பதிப்பு)	...	2 25
11	பதினோராந்திருமுறை .. (அச்சில்)		
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	...	0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்)	...	2 50
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	...	0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	...	3 00
17	தாயுமான சுவாமிகள் பாடல்-குறிப்புரையுடன் (அச்சில்)	...	
18	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	...	1 75
19	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் ..	...	2 75
20	.. யுத்த தேவகாண்டம் ..	...	2 00
21	.. தக்ஷகாண்டம் ..	...	1 50
22	கந்தபுராண வசனம் (அச்சில்)		
23	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	...	0 25
24	கந்தரனுபூதி	...	0 13
25	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	...	0 37
26	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	...	0 06
27	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும்	...	0 37
28	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 50
29	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 06
30	சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும்	...	1 00
31	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
32	திருக்குறள் – பொருட்பால் ..	...	2 50
33	திருக்குறள் – காமத்துப்பால் ..	...	1 00
	ஷெ 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574

34	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
35	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
36	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
37	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
38	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சி யம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை- மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
39	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
40	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை- தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
41	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
42	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
43	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
44	தமிழிசைப்பாக்கள் [அச்சில்]		
45	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
46	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
47	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங் களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
48	அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம்மட்டும்) (அச்சில்)	...	
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
52	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	ஷெ ஷெ பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
54	ஷெ ஷெ காமத்துப்பால் ஷெ	...	1 20
55	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	...	0 50
56	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '62